# ஜகன் மோகினி

72

மே
1955

# JAGAN MOHINI

ESTD. 1923

அணா
நான்கு

தேவர்களுடைய காரியம்
இவரால்தான் நிறைவேறவேண்டும்

—காளிதாஸன் கனவு: குமாரஸம்பவம்



4 - JUL 1955
MADRAS
1762
72
3-55
JC
[illegible]
18391

அரிய தமிழ் விருந்து

# உதயசூரியன்

வை.மு.ஸ்ரீநிவாஸன், M.A.B.L.
முதல் நவீனம் - ரூ. 1-4-0

1. மங்களபுரியில் மகிழ்ச்சி உதயம் 2. நாமகரணமும் நாற்பது திங்களும் 3. மங்களபுரியின் மூன்று திலகங்கள் 4. ஜீவியச்சுழலில் சோதனையின் கொடுமை 5. புயலும் அமைதியும் 6. குருகுல வாசமும் குமரனின் உள்ளமும் 7. ராஜ்யாபிஷேகமும் ராஜ்யபாரமும் 8. காதல் போதனை—கம்பன் வர்ணனை 9. எதிர்பாராத சம்பவம் 10. அதிர்ச்சியும் வைராக்யமும் 11, இதய ஒலி 12. போர்க்களத்தில் மனப்போர் 13. உணர்ச்சி வெள்ளம் 14. இருண்டவானம் 15. உதய சூரியன் [ஸ்ரீசுத்தானந்தரின் முகவுரையுடன்.]

# மதமா, மனமா?

வை.மு.ஸ்ரீநிவாஸன், M.A.B.L.
இரண்டாவது நவீனம் - ரூ. 1-4-0

1. சேற்றில் முளைத்த செந்தாமரை 2. அகமலர்ச்சியும் ஆபத்தும் 3. பரபரப்பும் பரிதவிப்பும் 4. வாழ்வும் தாழ்வும் 5. சோகமும் வேகமும் 6. இடியும் மின்னலும் 7. பிரசாரமும் விசாரமும் 8. அன்றும் இன்றும் 9. அலறலும் ஆறுதலும் 10. கண்கொள்ளாக் காட்சி 11. விளம்பரமும் விபரீதமும் 12. மனக்கண்ணுடியே உலகம் 13. இன்னலைப் புன்னகைப்போம் 14. உயிர் நிலை — உயர் நிலை 15. பொருள்—அருள்—அமைதி 16. மனதின் சூக்ஷ்மாணுக்கள் 17. அருள் நிலத்தில் அமரானந்தப் பயிர் 18. அவனியில் யாவும் அவனாலே 19. காதல் விளக்கம்—அன்பின் தாயகம் 20. மதமா, மனமா?—மனத்திருவிளையாடல்.

# அவஸரமூர்த்தியின் அபூர்வ டயரி

வை.மு.ஸ்ரீநிவாஸன், M.A.B.L.
மூன்றாவது சித்திரம் - ரூ. 1-8-0

1. நவீன ப்ரஹ்மதேவன் 2, நவீனங்களின் முன்னோர் 3. கடவுள் இருக்கிறார்! 4 பிரமித்துவிட்டோம்! 5. கீர்த்தனைமணி! 6. ஒரு வாரம் 7, ஸர்வம் ஸங்கீதமயம் 8. இந்திரனின் புதல்வன் 9 ஸ்ரீ க்ருஷ்ணாம்ருதம் 10. கண்கொள்ளாக் காட்சி 11 அன்பின் ஆற்றல் 12. வாழ்வின் மேடு பள்ளங்கள் 13. எதிர்பாராத அநுபவம் 14 பொன் விழா 15 ஆறுதலும் கிளர்ச்சியும் 16 திருப்பதி யாத்திரை.

# மேனாட்டுத் தத்துவம்

## இரண்டாம் பாகம்

## ப்ளேட்டோ

ரா. ஸ்ரீ. தேசிகன், எம். ஏ.

சென்ற இதழ்த் தொடர்ச்சி

பிளேட்டோ பல ஆண்டுகளை வெளியிலே கழித்ததாக நாம் அறிகின்றோம். எகிப்து, இத்தாலியின் கீழ்ப்பாகம், சிசிலி—இப் பிரதேசங்களில் இவர் தங்கி, தம்முடைய அறிவைப் பெருக்கிக் கொண்டார் என்பது உண்மையே. இவ்விடங்களுக்குப் போகு முன் இவர் மெகராவில் (Megara) சில காலம் உறைந்ததாகவும் நாம் அறிகின்றோம்.

அத்தீனியர்கள் பல துறைகளில் இருக்கும் இயல்புள்ளோர். ஆனால், எகிப்தில் இவர் கண்ட ஓர் உண்மை இவர் சிந்தையைக் கவர்ந்தது. தொழிற் பிரிவினையை அங்கே இவர் கண்டார். ஒவ்வொருவரும் அறிவுக்கேற்ப, ஆற்றலுக்கேற்ப ஒவ்வொரு தனித்தொழிலில் இறங்கும் நிலையை இவர் உணர்ந்தார். இத்தகைய தொழிற் பிரிவினையை (Division of Labour) தம்முடைய குடியரசில் பிளேட்டோ சித்திரித்திருக்கிறார்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
JUL 1955
MADRAS

மேலும், கட்டாயப்படிப்பு எகிப்தில் நிலைபெற்றிருந்தது. அறிவுக்கு முதன்மையை இவர் குருநாதரான சாக்ரடீஸ் அளித்திருக்கிற விஷயத்தை நாம் அறிவோம். அறிவுத்துறையில் இவர் அவருடைய அடிச்சுவட்டைப் பின்பற்றியிருக்கிறார். வான சாத்திரத்திலும், கணிதத்திலும் இவருக்கு அங்கே பயிற்சி ஏற்பட்டது.

கீழ்ப்பாக இத்தாலியில் இவர் சில காலம் கழித்தது இவருக்குப் பல நன்மைகளை நல்கிற்று என்று சொல்லலாம். பைதகோராஸைப் பின்பற்றுகிற அடியார்கள் உறைகின்ற நாடன்றோ அது? அங்கே ஒரு குடியரசு நிறுவப்பட்டிருந்தது. டாரண்டம் என்ற இடத்தில் அந்நாட்டை ஆள்கின்ற ஆர்கிடேயஸ் (Archytas) ஸைக் கண்டார். இவரோடு நிகழ்ந்த நட்பு பிளேட்டோவின் வாழ்க்கைப் புத்தகத்தில் ஒரு புதிய அத்தியாயமென்றே சொல்லலாம்.

இவர் (ஆர்கிடேயஸ்) அரசியல் துறையில் ஒரு மிகுந்த அறிவாளி; போர்க்கலையை நன்கு உணர்ந்த இராணுவ வீரர்; ஓர் ஆழ்ந்த சிந்தனையாளர். பல அறிவுத்துறைகளில் ஒரு வழிகாட்டியாகத் திகழ்ந்தார். இன்பமாய்ச் சமுதாயத்தில் காலங் கழிக்கும் இயல்புள்ளவர். புல்லாங்குழலை மிகக் கவின்பெற வாசிக்கும் ஆற்றல் படைத்தவர். தம்மிடம் வேலை செய்யும் அடிமைகளை அன்போடு நடத்துவார். இறுதிவரையில் பல துறைகளில் உழைத்து வந்தார். முதுமைப்பருவத்தின் தளர்ச்சிகளையும், மனக்கோளாறுகளையும் இவர் அனுபவிக்கவில்லை. கடலில் எழுந்த ஒரு பெரும் புயலில் இவர் உயிரிழந்தார்.

இத்தகைய சான்றோனிடத்தில் ஒரு பெரிய லட்சிய புருஷனைக் கண்டார், பிளேட்டோ. இத்தகைய சான்றோன்தான் உலகத்தை ஆளவேண்டும் என்ற உண்மையை உணர்ந்தார். ஒரு வேந்தன் ஒரு தத்துவ ஞானியாக இருக்கவேண்டும் என்ற கொள்கையை உடையவர் பிளேட்டோ என்பது யாவரும் அறிந்த விஷயமே. ஜனகன் போன்ற ஞானிகள்தான் போற்றுதற்குரியவர்கள். அறிவில்லாத—படிப்பில்லாத—அமைச்சர்கள் ஆள்கின்ற காலமன்று அப்பொழுது.

பிளேட்டோவின் இத்தாலிப் பிரயாணம் பைதகோரஸின் கொள்கைகளில் இவரைத் தோயும்படிச் செய்தது. சிசிலிக்கு இவர் விஜயம் செய்த விஷயமும் ஆராய்தற்குரியதே. சைரகூஸ் (Syracuse) ஸில் அரசு செலுத்தி வந்த முதல் டயானிசியஸின் (Dionysius I) சகோதரியை மணந்த டயன் (Dion) பிளேட்டோவை வரவேற்கும்படி, தம் மைத்துனனைத் தூண்டினார். பிளேட்டோவை டயன் டாரண்டத்தில் சந்தித்திருக்கலாம். இவரைப்பற்றி நன்கு தெரிந்துகொள்ள வேண்டுமென்ற ஆவல் மிகுதியே இவரை இப்படித் தூண்டும்படிச் செய்தது என்று கூறலாம். டையானிசியஸ் இதற்கு இணங்கினார். இவர் சரியான முறையில் பட்டத்திற்கு வந்தவரல்லர். இப்படி வராதவர்கள் 'டையரண்ட்' (Tyrant) என்று அழைக்கப்படுவார்கள். இப்படி வந்தவர்கள் நன்றாய் ஆண்டிருக்கின்றனர். இத்தகைய காரணத்தால் இவர்களைக் கொடுங்கோல் மன்னர்கள் என்று சொல்லுவதற்கில்லை.

டையானிசியஸ் தம்முடைய அரசவையைப் பௌதிக சாத்திரிகளைக்கொண்டும், இலக்கியப் புலவர்களைக்கொண்டும் அலங்கரிக்க விழைந்தான். தன் முதுமைப்பருவத்தில் கவிதை யெழுதினான். அதை ஒலிம்பிக் திருவிழாக்களில் படிக்கும்பொழுது அத்தினீயர்கள் அதைச் 'சீ, சீ!' என்று இகழ்ந்தனர். அவர்களுக்கிடையே 'உஸ் உஸ்' என்ற அரவம் எழுந்தது. ஆனால், இவர் எழுதிய 'ஹெக்டரின் மீட்சி' என்ற சோக நாடகத்திற்குப் பரிசளித்த பொழுது உவகை மிகுதியால் இவர் இறந்தார் என்ற வம்பு எழுந்ததைப் பார்க்கின்றோம்.

பரிசு அளிக்கப்பட்டது நூலின் நயத்தைக் கருதியன்று; அரசியல் துறையில் இவன் உயர்ந்த இடத்தைப் பெற்றிருந்ததே இப்பரிசுக்குக் காரணமாயிற்று.

பிளேட்டோ, சைரகூஸில் கண்ட காட்சி எதிர்பார்த்ததற்கு முற்றிலும் மாறாயிருந்தது. ஆர்கிடேமஸ் எத்தனைக்கு எத்தனை மகா புருஷனாய்க் காட்சி அளித்தாரோ, அத்தனைக்கு அத்தனைக் கயவனாய டயானிசியஸ் காட்சி அளித்தான். ஓர் அரசன் இப்படி இப்படி இருக்கக்கூடாது என்றதற்கு லட்சியமாயிருக்கிறான் என்றதைப் பிளேட்டோ உணர்ந்தார்.

இந்த டயானிசியஸ் தன்னுடைய பெரும் முயற்சியாலே முன்னுக்கு வந்தவன். ஒரு மாஜிஸ்ட்ரேட் ஆபீஸில் ஒரு குமாஸ்தாவாயிருந்தான். இவன் சொல் வன்மையாலும், போரில் காட்டிய திறமையாலும் மக்கள் உள்ளத்தைக் கவர்ந்தான். சூது வாது செய்து நாட்டிற்குத் தலைவனாக ஆகிவிட்டான். ஒரு நாட்டின் சீர்

18391

குலேந்த நிலையில் எப்படி ஒரு கயவன் முன்னேற முடியும் என்ற தற்கு ஓர் உதாரணமாய் டயானிசியஸ் காட்சி அளித்தான். இப்படித்தான் கொடுங்கோல் மன்னர்கள் தோன்றுவார்கள் என்று தம் குடியரசில் பிளேட்டோ கூறியிருக்கிறார். இத்தகைய சித்திரம் அவருடைய சொந்த அனுபவத்தில் அலர்ந்திருக்கிறது என்று தைரியமாய்ச் சாற்றலாமன்றோ?

டயானிசியஸ் இரக்கமற்றவன்; ஒரு மிருகம்போல் நடந்து கொண்டான். எல்லாவற்றையும் ஐயத்தோடு நோக்கும் இயல் புள்ளவன். தன்னுடைய சபையில் விளங்கும் வித்வான்களின் மீது காறி உமிழ்ந்தான். இவன் பாட்டின்மீது குற்றஞ்சாட்டுகிற வர்களைக் கல் உடைக்கும் அடிமைகளாகச் செய்துவிடுவான். பிளேட்டோ இந்தக் கொடுங்கோல் அதிகாரியினிடம் தம்முடைய உண்மையான கருத்தைச் சொல்லியிருக்க வேண்டும். டயானி சியஸ் வெகுண்டு பிளேட்டோவுக்கு இடுக்கண் விளைவித்திருக்க வேண்டும்.

பிளேட்டோவை ஒரு இஸ்பார்ட்டாவைச் சார்ந்த தூதனிடம் காட்டிக்கொடுத்துவிட்டான். இந்தத் தூதன் பிளேட்டோவை அஜினவுக்கு அனுப்பினன். அத்தீனியன் அந்த இடத்தில் காலடி வைத்தால் அவனுக்கு மரண தண்டனைதான் நிகழும். ஏதன்ஸுக்கும் இஸ்பார்ட்டாவுக்கும் மிகுந்த பகை கொழுந்துவிட் டெரிகிற காலம் அது. அடிமைச் சந்தையில் பிளேட்டோ விற்கப் படும் நிலையில் வந்துவிட்டார். இவருக்குத் தெரிந்த நண்பர் இவரை விலைக்கு வாங்கி இவரை விடுவித்தார். ஏதன்ஸ் நகரத் திற்கு உயிர் பிழைத்து வந்தார். 'சிசிலிக்கு மீண்டும் போகமாட் டேன்' என்ற தீர்மானத்திற்கு வந்தார்.

ஆனல், தெய்வ சங்கற்பம் துண்டாய் நின்றது என்றதைப் படிப்போர்கள் பின்பு உணர்வார்கள். இப்பொழுது பிளேட்டோ வுக்கு வயது நாற்பது. தனியாய் இன்பமாய் வாழ்க்கை நடத்தக் கூடிய வசதிகளைப் பெற்றார். ஏதன்ஸுக்கும் இஸ்பார்ட்டாவுக்கும் நிகழ்ந்த புதிய போரும் முடிவடைந்தது.

பிளேட்டோ தம் அக்காடமி—(Academe)யை கழகத்தை— நிறுவினர். கழகம் அமைந்த இடம், உள்ளங்கவரும் ஓர் இன்ப மான இடம். எல்ம்ஸ், ஆலிவ் முதலிய மரங்களின் இலைகள் காற் றில் மெல்ல அசைந்து மதுரமாய் ஒலிக்கும். அருவிகள் பண் ணிசைத்துப்பாடி அமைதியாய் நகரும். புட்கள் பூம்பொழில்களில் இன்பமாய்ப் புலம்பும். எழில் நிறைந்த இடத்தில்தான் ஞானம் உதயமாகும் என்ற உண்மையை நாம் மறக்க முடியாது. பள்ளி களைச் சந்தடியில்லாத, இயற்கை எழிலும், அமைதியும் கொஞ்சிக் குலாவும் இடத்தில்தான் சமைக்க வேண்டும் என்றதை நாம் உணர வேண்டும்.

வேத காலத்து ரிஷிகள் தபோவனங்களில் தங்கள் உபதேசங் களைச் செய்தார்கள். மாணவர்கள் ஆசிரியர்களை நாடினர்கள். அவர்களுக்கு அறிவுத் தாகமும் பசியும் மிகுதியாயிருந்தன. ஆசிரியர்களைத் தெய்வங்கள்போலப் போற்றினர்; இப்பொழுது ஆசிரியர்கள் மாணவர்களை நாடுகின்றனர்! ஆசிரியர்களுக்குக் கௌரவமும் மதிப்புமில்லாமல் போயிற்று! உண்மையை

உரைக்குமிடத்து ஆசிரியர்கள் மலர்கள்போலத் திகழவேண்டும்; மதுகரம்போல் மாணவர்கள் அறிவுத்தேனையும் மணத்தையும் தேடி அலைய வேண்டும்; அப்பொழுதுதான் அறிவின் ஆற்றல் புலனாகும்.

'அக்காடமி' என்ற சொல் அந்த இடத்திற்குச் சொந்தக்காரனின் பெயரான ஹெக்காடிமஸிலிருந்து (Hecademus) பிறந்திருக்கக் காரணமுண்டு. அந்த அக்காடமியில் படிப்பெல்லாம் சாக்ரடீஸ் கண்ட முறையில்தான் நிகழ்ந்தன; வினாவிடைச் சுருதியில் தான் சென்றன. பூம்பொழில்களில் உலாவிக்கொண்டே பிளேட்டோ உபதேசங்கள் செய்வார். உபந்யாசங்கள் எழுதப்படவில்லை. மாணவர்கள் உபந்யாசங்களைக் கேட்டு அவைகளைக் குறித்துக்கொள்ளுவார்கள். உதாரணமாக பிளேட்டோ முதுமைப் பருவத்தில் 'நன்மை' (The good) என்ற தலைப்பின் கீழ் புரிந்த உபந்யாசத்தைப்பிளேட்டோவின்ப்ரதமசிஷ்யரான அரிஸ்டாடிலும் மற்றைய சிஷ்யர்களும் பிரசுரித்ததாக நமக்குச் செய்தி கிடைக்கின்றது.

'சுருதப்பிரகாசிகை' என்ற உரை நூலைப்பற்றி நாமும் கேட்டிருக்கிறோமல்லவா? திருவாய்மொழி உரைகளெல்லாம் உபந்யாஸ முறையில்தான் பிறந்திருக்கவேண்டும். சான்றோர்களின் வாயிலிருந்து உதிர்ந்த முத்தாம் உபதேசங்கள் இப்பொழுது புத்தக வடிவிலே தோன்றியிருக்கின்றன என்று சொல்லலாம்.

இந்த அக்காடமிக்குக் கிரேக்க தேசத்து எல்லாப் பகுதிகளிலிருந்தும் மாணவர்கள் இடையறாத வெள்ளம்போலத் திரண்டு வந்தனர். சிலரே பௌதிக சாத்திரத்தைத் தங்கள் வாழ்க்கைப் படிப்பாகப் போற்றினர். பலர் அரசியலுக்கு வேண்டிய பொதுவான கல்விப் பயிற்சியை நாடினர். மாணவர்கள் பணக்காரக் குடும்பத்தைச் சார்ந்தவர்கள். நடையுடை பாவனை இவையாவையிலும்சாதாரண மக்களைவிட இவர்கள் வேறுபட்டுத் திகழ்ந்தனர்.

அந்தக் காலத்து நகைச்சுவை ஆசிரியர்கள் இவர்களை எள்ளிநகையாடிய சம்பவங்களும் நமக்குக் கிடைக்கின்றன. இந்த அக்காடமி நடைபெறுவதற்கும் பணம் வேண்டுமே; மாணவர்கள் ஏதோ மனமுவந்து அளித்த காணிக்கையே இதற்குத் தனமாயிற்று. டயன் போன்ற பிரபுக்களும் இதற்கு உதவி புரிந்தனர். ஞானம் எல்லோருக்கும் பொதுவான சொத்தாகும்; அறிவுக்கோயிலைப் பரிபாலிப்பது எல்லோருடையவும் கடனாகும்; அறிவை விற்கக்கூடாதென்ற நோக்கம் பிளேட்டோ கொண்டவர் போலும்; தம்முடைய பணத்தையே இந்த அக்காடமிக்கு இவர் அர்ப்பணம் செய்தாரென்றால், அறிவின்பால் இவருக்கு இருந்த ஆர்வம் எத்தகையது என்பது சொல்லாமலேயே விளங்குமன்றோ? தத்துவத்தின் எல்லாப் பகுதிகளையும் இவர் கல்விக்குப் பொருளாக்கிக் கொண்டார். அகவுயிர் வளர்ச்சிதான் இவர் கொண்ட நோக்கமாகும். இந்திரியச் சேற்றில் உழன்று தத்தளிக்கும் ஆத்மாவைவிடுவிப்பதே கல்வியின் குறிக்கோளாகும் என்று தேர்ந்தார்; அரிஸ்டாடில் சமைத்த அக்காடமி இவர் சமைத்த கழகத்தைக்காட்டிலும் பெரியது; மிகச் சோபை வாய்ந்தது.

செல்வத்தில் திளைத்தது. அரிஸ்டாடில் அரசிளங்குமரர்களுக்கு உபாத்தியாயராயிருந்ததை நாம் மறக்கமுடியாது. ஆனால், பிளேட்டோ நிறுவிய அக்காடமியில் வெறும் உடலைவளர்க்கும் இன்ப நல்லுண்டியை எதிர்பார்க்க முடியாது; அங்கே ஞான நல விருந்துதான் நல்கப்படும்.

இருபது ஆண்டுகளாக அக்காடமி தழைத்தோங்க அரும் பாடுபட்டார். கிரேக்க நாட்டிற்கே ஞானநற்சுடர் திகழும் அறிவுக் கோயிலாக இவருடைய அக்காடமி காட்சி அளித்தது என்றால் அது மிகையாகாது. கணிதநூல், பௌதிக சாத்திரம் தத்துவ சாத்திரம்—இவைகள் வளர ஞானக் கழனியாய் அக்காடமி திகழ்ந்தது என்று சொல்லலாம். தவநெறிக்கு ஒரு பெருநெறியை அமைக்க அவர் முயன்றார். கி. மு. 367 நூற்றாண்டில் முதல் டயானிசஸ் மாண்டான். அவன் மகன் இரண்டாம் டயானிசஸ் அரியணை மீது அமர்ந்தான்.

பிளேட்டோவின் மாணக்கரும், நண்பருமான டயனின் உதவியை அவன்நாடினான். டயன் இவனுக்கு அத்தை புருஷனாக வேண்டுமென்பது நமக்குத் தெரிந்த விஷயமே. பிளேட்டோவைக் கொண்டு இந்த அரசிளங்குமரனை நல்வழிக்குக் கொண்டு வர டயன் முயன்றான். டயானிசியஸும் இதற்கு உடன்பட்டான். பிளேட்டோ சற்றுத் தயங்கினார்; ஆனால், அநேக நண்பர்களின் தூண்டுதலால் சிசிலிக்குப் போகச் சம்மதித்தார். எல்லாம் தெய்வத்தின் திருவிளையாடல்தான். துறைமுகத்திலிருந்து அழகிய புரவிகள் பூட்டிய வேந்தர்கள் பவனி வரும் நல்லதோர் ரதத்தில் அழைத்துச் செல்லப்பட்டார் பிளேட்டோ. முதல் முதலில் கணிதத்தை அவர் தொடங்கினார். பொழிலின் பாதைகள் யாவும் கோண சாத்திரச் சித்திரங்களாய்த் திகழ்ந்தன.

சில நாட்கள் தேய்ந்ததும் கணிதத்தில் டயானிசிஸுக்கு ஆர்வம் குன்றத் தொடங்கிற்று. இதற்கிடையே டயனின்மீது டையானிசிஸ்ஸுக்கு அவநம்பிக்கை பிறந்தது. அவனுடைய பகைவர்கள் சூழ்ச்சி செய்து அவனை நாட்டை விட்டுத் துரத்தி விட்டனர். பிளேட்டோவும் வெளியேறத் தீர்மானித்தார். டயானிசிஸுக்குப் பிளேட்டோவை விட்டுப் பிரிய மனம் வரவில்லை. இதற்கிடையே போர்முகில் எங்கும் சூழ ஆரம்பித்தது. இதை ஒரு காரணமாக வைத்துக்கொண்டு பிளேட்டோ இத்தாலியை விட்டுக் கிளம்பினார்.

டயானிசிஸ் டயனின் சொத்தைப் பறிமுதல் செய்ததோடு நிற்காமல் அவனுடைய மனைவியைத் தனக்கு வேண்டிய ஒருவனை மணக்கும்படித் தூண்டினான். ஆனால், டயனுக்கு நற்காலம் பிறந்தது. நண்பர்கள் உதவி செய்ய முன் வந்தனர். இவர் ஒரு பெரும் படையைத் திரட்டிக்கொண்டு டயானிசிஸ்ஸைத் துரத்தி அடித்தார். ஆனால், இவர் புகழ் நீடித்து நிற்கவில்லை. பிளேட்டோவும் இவருக்கு ஆசிச்செய்தி அனுப்பினார். ஆசி மொழி அனுப்பினால் என்ன? அகாடமியில் சேர்ந்து படித்த காலிப்பஸ் (Callippus) என்பவன் டயனைக் குத்திக் கொன்று விட்டான்.

நம்பிக்கைத் துரோகம் செய்த காலிப்பஸை எமபுரிக்கு அனுப்பிவிட்டனர், டயனின் உண்மை நண்பர்கள். டயானிசிஸ் மீண்டும் நாட்டிற்கு வந்து ராஜ்யத்தைக் கைப்பற்றினான்.

ஆனால், லியாண்டினி, (Leontini) கார்த்தேஜ் (Carthage) இவ்விருநாடுகளின்படைகள் சைரகூஸைச் சூழ்ந்துவிட்டன. அகத்திலும் புறத்திலும் கடல்போல அலையெறிந்து நின்ற படைகள் புரியும் இன்னல்களைத் தாங்காது தாயகமான காரின்த்(Corinth) நாட்டிற்குச்செய்தி அனுப்பினார்கள். சைரகூஸின் மக்கள் காரின்தின் நாட்டு இராணுவத் தலைவனான டிமோலியன் தோன்றி அவர்களுக்கு அபயம் அளித்தான். சூழ்ந்த படைகள் ஓடிவிட்டன. டையானிசிஸ் காரின்த்தில் தன் வாழ்நாளைக் கழித்தான்.

இறுதியில் ஒரு பள்ளிக்கூடத்தில் ஆசிரியராக அமர்ந்து தம் கடை நாட்களைப் போக்கினான். உபாத்தியாயர் தொழில்தான் இருள் சூழ் அந்திப்பொழுதின் வாழ்வில் இவனுக்கு ஒரு கலை கண்ணாய்க் காட்சி அளித்தது போலும்.

இப்புரட்சிகளைக் கண்ட பிளேட்டோ நிலையாயுள்ள பொருளை நாடினார். உலகமாறுதல்களைப் பார்த்த அவர் கண்முன் ஓர் அழியாக் கற்பனை உலகம் விரிந்தது. டயன் கொலையுண்ட செய்தியும், காலிப்பஸ்ஸின் கோரமான துரோகமும் இவர் மனத்தைச் சற்றுக் கலங்கச்செய்தன. கி.மு.347 நூற்றாண்டில் தம் எண்பதாம் ஆண்டில் உயிரை நீத்தார்.

இவர், ஒரு ஞானிக்கொரு ஞானி; ஆசிரியருக்கொரு ஆசிரியர்; லட்சிய அரசியல் வாதிக்கொரு அரசியல் வாதி; பல ஆண்டுகளாக ஆசிரியராய்த் திகழ்ந்த காரணத்தால் அநேக மாணவர் அன்புச் செல்வத்தைப் பெற்றார். அவர்கள் உள்ளக் கோயில்களில் அறிவின் வடிவாய் உறையலானார். இறுதிநாள் வரையில் அவருக்கு உடற்சோர்வும், மனச்சோர்வும் ஏற்படவில்லை. நூல்களை எழுதிக் கொண்டிருக்கும் பொழுதே அவர் ஆவி பிரிந்தது என்று சிசிரோ (Cicero) சொல்லுகிறார். இது உண்மையன்று. ஒரு நண்பன் அளித்த மணவிருந்திற்கு இவர் போயிருந்தார். அந்த விருந்தின் மத்தியில் இவர் கண்களை மூடி விட்டார்!........ என்றுதான் சரித்திரம் கூறுகின்றது!

பிளேட்டோவின் பகைவர்கள் அவருடைய வாழ்க்கை அவர் செய்த உன்னத உபதேசத்திற்கொரு பெரும் உரையாயில்லை—அதற்கு மாறாகக் காட்சி அளிக்கிறது-என்று அவர்மீது பழியைச் சுமத்தினதாகத் தெரிகின்றது. உளம்,உரை,செயல்—இம்மூன்றும் முரண்படாது இருப்பதே மாசறு காட்சியரின் லட்சிய வாழ்வாகும் என்பது உண்மையே. ஆனால், பிளேட்டோமீது எழுந்த வசைமொழி அழுக்காறு தந்த வளமாயிருக்கலாம். பகைவர்கள் மாண்டு போய் விட்டனர்; அவர்களோடு பொறாமையாம் வெம்கனலும் அவிந்துவிட்டது. கால அலைகள் இடையறாது மோதி மோதி ஓய்ந்து நிற்கும் அமர நீள் வரைச் சிகரங்கள்மீது பிளேட்டோவின் ஞான நற்சுடர் வெள்ளம் விரியக் காண்கின்றோம்.

பிளேட்டோவையும், ரூசோ, (Rousseau) நீட்சே, Nietzsche) இவர்கள் போன்றவர்களை உணர்ந்து கொள்ளுவதற்கு இஸ்பார்ட்டாவைப்பற்றி நாம் நன்கு தெரிந்துகொள்ளவேண்டும்: இவ்விஷயத்தை அடுத்த பகுதியில் நாம் ஆராய்வோம், (தொடரும்)

# காவிதாசர் கனவு

## 8. உமாப்ரஸாதம்—குமாரஸம்பவம்

[கே. எஸ். ராமஸ்வாமி சாஸ்திரி]

[சென்ற இதழ்த் தொடர்ச்சி]

இம்மாதிரியாக தேவேந்திரனால் மெச்சிப் புகழப்பட்ட காம தேவன் ரதிதேவியுடனும் வசந்தனுடனும் பரமேச்வரனுடைய தவத்தைக் கலைக்கச் சென்றான்; வஸந்தனுடைய ஆற்றலால் உடனே உலகத்தில் அழகும் ஒளியும் இன்பமும் மிளிர்ந்தன: குளிர்ந்த தென்றல்காற்று மெல்ல வீசத் தொடங்கிற்று. அசோக மரம் குப்பென்று இளந்தளிர்களுடனும் மலர்களுடனும் குலுங்கிற்று. மாமரத்தில் மன்மத பாணங்களில் ஒன்றான அழகிய மலர்கள் பூத்தன. அவைகளில் மன்மதன் என்ற பெயர் எழுதப்பட்டதுபோல் வண்டுகள் அமர்ந்தன. கர்ணிகாரமரங்களில்மலர்கள் மணமில்லாவிட்டாலும் அழகிய வர்ணத்துடன் பிரகாசித்தன. பிரம்மதேவன் எல்லாப் பெருமைகளையும் திரட்டி ஓர் இடத்தில் அமைப்பதில்லை;பலாச மரங்களில் பிறைச் சந்திரன்போல் வளைந்த உருவமுள்ள மலர்கள் பிரகாசித்தன. வசந்த லக்ஷ்மி பூவில் அமர்ந்த வண்டையே திலகமாகக்கொண்டு அருணோதயம் போன்ற உதட்டில் தடவிக்கொள்ளும் கருவியால் மாந்தளிராகிற உதட்டை அழகு படுத்திக்கொண்டாள்; மான்கள் காமம் நிறைந்த மனதுடன் இங்குமங்கும் அலைந்தன. குயில் மாந்தளிரைத் தின்றதால் இன்பம் தரும் மெல்லிய குரலில் கூவியது, பெண்களுடைய அகங்காரத்தை அடக்கும் காமனுடைய ஆணையை ஒத்திருந்தது. தவமுனிவர்கள் அகாலத்தில் ஏற்பட்ட வசந்த சோபையால் மனத்தளர்ச்சியை அடைந்து பிறகு தங்களைத் தைரியப் படுத்திக் கொண்டார்கள். அவ்விடத்தில் கரும்பு வில்லை வளைத்து மலரம்புகளை நாணில் ஏற்றி வெற்றியை நாடிவரும் காமன் ரதிதேவியுடன வந்தவுடன் எல்லாப் பிராணிகளும் காதலெழுச்சியை அடக்கமுடியாமல் தவிப்பாகத் தவித்தன. ஆண் வண்டுகள் பெண் வண்டுகளுடன் பறந்து சென்று மலர்த்தேனைப் பருகி இன்பமடைந்தன. ஆண்மான் பெண்மானுடன் நெருங்கித் தன்னுடைய நீண்ட அழகிய கொம்புகளால் சொரிந்து கொடுத்தது. ஆண் யானை தன் துதிக்கையால் குளிர்ந்த தண்ணீரை உட்கொண்டு அதைப் பெண் யானைக்குக் கொடுத்தது. ஆண் சக்கிரவாகப் பக்ஷி தாமரைத் தண்டை சிறிது உண்டு மிகுந்த தண்டைப் பெண் சக்கிரவாகப் பக்ஷிக்குக் கொடுத்தது. இன்பமாகப்பாடும் கின்னரிகளை கின்னரர்கள் முத்தமிட்டு இன்புற்றார்கள். தளிர்களாகிய உதடுகளுடனும் மொட்டுகளாகிற தனங்களுடனும் கூடிய கொடிகளால மரங்கள் அன்புடன் தழுவப்பட்டன.

ஆனால், அப்ஸரப் பெண்கள் இன்பமயமான தேவகானம் செய்தாலும் பரமேச்வரனுடைய தவநிலை மாறவேயில்லை. சுய அடக்கமுள்ளவர்களுடைய உள்ள அமைதியை இடையூறுகள்

அழிக்கமுடியாதல்லவா? அவர் தவஞ்செய்யுமிடத்தின் வாயில் பக்கத்தில் நந்திதேவர் நின்று சிவகணங்களைத் தம்தம் உள்ள அமைதியை இழக்கக் கூடாதென்று கண்டிப்பான உத்தரவு செய்தார். உடனே அந்த வனம் எப்படி ஆயிற்று? மரங்கள் சிறிதும் அசையவில்லை. வண்டினங்கள் பாடவில்லை. பறவைகள் ஒலிக்கவில்லை. விலங்குகள் நகரவில்லை. அந்த வனம் அப்பொழுது உண்மையான வளமின்றி, ஓவியத்தில் தீட்டப்பட்ட வனம் போல் அசைவற்றிருந்தது.

அப்பொழுது காமன் பரமேச்வரனுக்கு நேர்முகமாகச்சென்று கண்களில் படாமல் ஒரு பக்கமாக நெருங்கி நோக்கினான்; அவ்விடத்தில் தேவதாரு மரத்தடியில் புலித்தோலில் அசைவற்று அமர்ந்திருந்த மகாதேவரைக் கண்டான். வீராசனம் என்ற யோகாசனத்தில் அமர்ந்து நிமிர்ந்து முதுகெலும்புடன் தோள்களைத் தளர்த்தி அவர் அமர்ந்திருந்தார். இரு கைகளையும் ஒன்றின் மேல் ஒன்று வைத்திருந்ததால் அவைகள் இரண்டும் சேர்ந்த முழு மலர்ச்சியின் பொலிவுடன் விளங்கும் தாமரைப் பூவை ஒத்தன. தலைச் சடையை பயங்கரமான பாம்பினால் சுற்றிக் கட்டியிருந்தார். காதுகளில் ஜபமாலைகளைத் தொங்கவிட்டிருந்தார். அவருடைய கறுத்த கழுத்தினுடைய நீல ஒளியால் அதிகமாகக் கறுத்த புள்ளிமான் தோலை மார்பில் போர்த்து முடிச்சுப் போட்டிருந்தார். புருவங்கள் அசைவின்றிக் கொஞ்சம் திறந்த கண்களால் கீழ்நோக்குடன் மூக்கின் நுனியை நோக்கிப் பொறிகளை யடக்கி அசைவற்று உட்கார்ந்திருந்தார். மழை பெய்யாமல் அசைவற்று நிற்கும் மேகம் போலவும் அலையற்ற கடல்போலவும் காற்றில்லாத இடத்தில் அசைவின்றி விளங்கும் விளக்குப்போலவும் மூச்சை நிறுத்தியிருக்கும் நிலையில் விளங்கினார். அவருடைய தலையின் உச்சியிலிருந்து கிளம்பும் தவாக்னி ஜ்வாலையால் தலையில் இருந்த இளம்பிறையின் ஒளி குன்றி மழுங்கி இருந்தது. உடலிலுள்ள ஒன்பது துவாரங்களிலிருந்தும் மனதை உள்ளிழுத்து இதயத்தில் நிலைநிறுத்தி அழிவற்ற ஒப்பற்ற தன் மகிமையை தன்னிடத்தில் உணரும் சமாதியில் நிலையாக இருந்தார்.

"அவ்ருஷ்டி ஸம்ரம்ப மிவாம்புவாஹம்
அபாமிவாதாரம் அநுத்த ரங்கம் |
அந்தச் சராணும் மருதாம் நிரோதாத்
நிவாத நிஷ்கம்பமிவ ப்ரதீபம் || "

"கபால நேத்ராந்தர லப்த மார்க்கை:
ஜ்யோதி: ப்ரரோ ஹைருதித: சிரஸ்த: |
ம்ருணாள ஸூத்ராதிக ஸௌகுமார்யாம்
பாலஸ்ய லக்ஷ்மீம் க்லபயந்த மிந்தோ: || "

"மனோ நவத்வார நிஷித்த வ்ருத்தி
ஹ்ருதி வ்யவஸ்தாப்ய ஸமாதிவச்யம் |
யமக்ஷரம் வேதவிதோ விதுஸ்தம்
ஆத்மான மாத்மன்யவலோகயந்தம் || "

# ஆன்ம தத்துவம் (ஆன்மாவின் இயல்பு)

பண்டிதை S. கிருஷ்ணவேணியம்மாள்,
முன்னைத்தலைமைத் தமிழ் ஆசிரியை,
சென்னை லேடிவில்லிங்டன் உயர்தரக் கலாசாலை.

[சென்ற இதழ்த் தொடர்ச்சி]

விளக்கம் : 52. "சாங்கியர் கூற்றில் வியாசர் கருத்தைக் காண்பாம்; எஜமானன் ஒரு வேலையைச் செய்யுமாறு ஊழியனுக்குக் கட்டளை இடுகிறான். இக்கட்டளை அறிவை உண்டாக்குகிறது. அவ்வறிவிற்கேற்ப அவன் செயல் புரிகிறான். இதில் செயலும் அறிவும ஒருவர்பாலே உள்ளன என்பது வெள்ளிடைமலையன்றோ! இத்தன்மையில் சாங்கியர் கூறுகிறபடி கொள்ளின், மனத்திற்கே செயல், அறிவு ஆகிய இவைகள் உண்டு என்று தானே சொல்ல வேண்டும். அங்ஙனம் சொல்ல முடியுமா?" என்று வியாசர் சாங்கியர் கொள்கையைக் கண்டிக்கிறார்.

இன்னும் சாங்கியன் "அறிவுடைய சேதனனோடு சேர்ந்த பிரகிருதி (மனம்) காரியங்களைச் செய்கிறது. அம்மனத்தத்துவத்தோடுங்கூடிய சீவன் அக்காரியங்களின இன்ப துன்பங்களை அனுபவிக்கிறான்", என்கிறான். இது பொருத்தமுடையதன்று. ஏனெனில், யார் ஒருவர் செயலைச் செய்கின்றனரோ, அவருக்குத் தான் அதனைச் சார்ந்த இன்ப துன்பங்களையும் அனுபவிக்க முடியும்.

அவ : ஆனல், (இக்கர்த்ருத்வம்) காரியங்களைச் செய்யும் வன்மை ஆன்மாவிற்கு இயற்கையோ? என்னும் ஐயத்தில் அருளிச்செய்கிறார் :

**மூலம் : 33.** ஸாம்ஸாரிக ப்ரவ்ருத்திகளில் கர்த்ருத்வம் ஸ்வரூப ப்ரயுக்தமன்று.

பொருள் : தேகத்தோடுங் கூடியிருக்குங்கால், உணவு முதலியவற்றாலுண்டாகும் இன்பங்களைக் கருதிச் செய்யும் செயல்களில் ஏற்படும் கர்த்ருத்வம ஆன்ம நிலையைப் பற்றியதன்று.

அவ : ஆனல், காரியஞ் செய்யும் வன்மைதான் இவனுக்கு வந்தபடி என? என்னும் ஐயத்தில் அருளிச்செய்கிறார்.

**மூலம : 34.** குணஸம்ஸர்க்கக்ருதம்.

பொருள் : சீவனுக்குக் குணங்களின் சேர்க்கையினாலேயே காரியங்கள நிகழுகின்றன. ஆனல், அவன், சத்வகுணமுண்டாகுங்கால் நற்கருமங்களையும், மற்ற இரு குணங்களும் ஏற்படுங்கால், அவற்றிற்கேற்ற செயல்களையும் செய்கிறான்.

அவ : காரியஞ்செய்யுந்தன்மை ஆன்மாவிற்கு அமைந்த முறை யாங்ஙனம்? என்னும் ஐயத்தில் அருளிச்செய்கிறார் :

மூலம் : **35.** கர்த்ருத்வம்தான் ஈசுவராதீநம்.

பொருள் : காரியஞ்செய்யுந்தன்மை இவனுக்குப் பகவான் கொடுக்க ஏற்படுகிறது.

அவ : 26-ம் சூத்திரத்தில் ஆன்மா, ஞானத்திற்கு இருப்பிடம் என அருளிச்செய்தார். 27-ம் சூத்திரத்திலிருந்து 35-ம் சூத்திரம் வரை, அதைக் குறித்தவற்றையே இயம்பினர். இச்சூத்திரத்தில், இங்ஙனம் ஆன்மா ஞானத்திற்கு இருப்பிடமானது என்னில், இவனைச் சாத்திரம், ஞானம் என்று சொல்லுவானேன் எனச் சிலர் வினவும் வினாவைத் தெரிவிக்கிறார்.

மூலம் : **36.** ஜ்ஞாநாச்ரயமாகில் சாஸ்த்ரங்களிலே இவனை ஜ்ஞாநமென்று சொல்லுவானேன் ? என்னில் ;

[இச்சூத்திரத்தின் பொருள் அவதாரிகையில் சொல்லப்பட்டுள்ளது.]

அவ : சாத்திரங்கள் இங்ஙனம் இயம்புதற்குக் காரணம் இன்னது என்கிறார் :

மூலம் : **37.** ஜ்ஞாநத்தையொழியவும் தன்னை அறிகையாலும், ஜ்ஞாநம் ஸாரபூதகுணமாய் நிரூபகதர்மமாகையாலும் சொல்லிற்று.

பொருள் : ஆன்மா, அறிவின் உதவியின்றித் தனக்குத்தானே தோற்றுகையாலும், மலருக்கு மணம் போன்று அறிவு இதை விட்டுப் பிரியாததும் சிறந்ததுமான தருமமாயிருத்தலாலும் சாத்திரங்கள் இங்ஙனம் சொல்லுகின்றன.

விளக்கம் : ஒளியின்றி இருப்பினும் விளக்கு தானே தோற்றுதல் போன்று, அறிவு இன்றி இருப்பினும், ஆன்மா தானே தோற்றுகிறது. குணத்தையிட்டே குணியைச் சொல்வது போன்று (பொய்யனைப் பொய்யென்றே சொல்வது போன்று), ஞானத்தினால் ஒளிர்ந்துகொண்டிருக்கும் ஆன்மா ஞானமென்றே சொல்லப்படுகிறது.

அவ : நியாம்யம் இன்னது எனக் கூறுகிறார் :

மூலம் : **38.** நியாம்யமாகையாவது — ஈசுவர புத்த்யதீநமாக எல்லா வ்யாபாரங்களும் உண்டாகும்படி இருக்கை.

பொருள் : பகவானுடைய சங்கற்பத்தினாலேயே ஆன்மாவினுடைய எல்லாக் காரியங்களும் நிகழ்வனவாக இருத்தல்.

விளக்கம்: ஆன்மாவின் சங்கற்பத்தினுல் உடலின் செயல்கள் நடைபெறுதல் போன்று, பரமாத்மாவின் சங்கற்பத்தினுல் ஆன்மச் செயல்கள் நடைபெறுகின்றன. ஆதலின், ஆன்மா பகவானுல் தாண்டப்படும் பொருளாக உள்ளது என அறிகின்ருேம்.

அவ: தார்யம் என்பது இன்னது என்கிருர்:

மூலம்: **39.** தார்யமாகையாவது—அவனுடைய ஸ்வரூப ஸங்கல் பங்களை ஒழிந்தபோது தன் ஸத்தை இல்லையாம்படி இருக்கை.

பொருள்: பரமான்மா, அவன் சங்கற்பம் ஆகிய இவற்றின் தொடர்பு இல்லாதபோது, சீவான்மாவினுடைய சத்தை இன்றி யிருத்தல்.

விளக்கம்: ஆன்மா, உடலின் இருதயத்தில் இருந்துகொண் டிருத்தலின், இது சரீரத்தைச் சொரூபத்தால் தாங்குகிறது என்றும், யோகம் முதலியவற்றைச் செய்யுங்கால் கை கால் முதலிய அவயவங்கள் இங்கிலையில் இருத்தல் வேண்டுமெனச் சங்கல்பித்துக்கொண்டபடியே அவற்றை நிறுத்துவதால் ஆன்மா உடலைச் சங்கற்பத்தால் தாங்குகிறது என்றும் தெரிந்துகொள்ளு கின்ருேம். இம்முறையில் பரமாத்மாவும் சீவான்மாவைத் தன் சொரூப சங்கற்பங்களினுல் தாங்கிக்கொண்டிருக்கின்ருன் என்பதை அறியலாகும்.

அவ: அசித்துப் பொருள்கள் ஆன்மாவிற்காகவே இருத்தல் போன்று, ஆன்மாவும் பரமான்மாவிற்காகவே இருப்பதுவே சேஷத்துவம் என்கிருர்.

மூலம்: **40.** சேஷமாகையாவது—சந்தந குஸுமம தாம்பூலாதி களைப்போலே, அவனுக்கு இஷ்ட விநியோகார் ஹமாயிருக்கை.

பொருள்: சேஷமாகையாவது சந்தனம், மலர், தாம்பூலம் முதலியன, அவற்றைப் பயன்படுத்துபவனுடைய விருப்பத்திற் கேற்பத் தகுதியுற்றனவாய் இருத்தல் போன்று, இந்தச் சீவான் மாவும் பகவானுடைய பிரியத்திற்கேற்பப் பயன்படுதற்குத் தகுதி யுடையனுயிருக்கை.

விளக்கம்: தங்கம் அணிகளாக மாறுதலை அடைதற்கு ஏற்றதாயிருத்தல் (யோக்கியதையுடையதாயிருத்தல்) போன்று, ஆன்மா பகவானுக்குத் தொண்டு புரிதற்கு யோக்கியமுடையனுய் இருத்தல் சேஷத்துவம் எனப்படும். (தொடரும்)

# பாட்டி சொன்ன பழங்கதை 4.

சிறுவன் வை. மு. வெங்கட்நரசிம்மன்.

## பணம்மென்றால் பிணமும் வாய்திறக்கும்

ஓர் ஊரில் ஓர் அம்மா இருந்தார்கள். அவர்களுக்கு ஐந்து பிள்ளையும், ஒரு பெண்ணும் இருந்தார்கள். பிள்ளைகளுக்கு கல்யாணம் ஆய்விட்டது. பிள்ளைகளுக்கு அப்பா இல்லை. அம்மாவிற்கு மிகப் பெரிய நோய் வந்து விட்டது. அவளை நாட்டுப் பெண்கள் இம்சித்து வந்தனர். ஒருநாள் மூத்த பிள்ளை தன் தாயிடம் போய் உட்கார்ந்தான். அப்போது அவன் தாய் தன் கஷ்டங்களையெல்லாம் அழுது கொண்டே சொன்னாள். அதைக்கேட்ட அவன் "அம்மா நான் ஒரு சூழ்ச்சி செய்கிறேன்" என்றான். "அதன்படி நடந்தால் நன்றாய் உபசாரம் செய்வார்கள்" என்றான்.

ஃ ஃ ஃ

மறுநாள் சீக்கிரம் சாப்பிட்டு விட்டுப் பேசிக்கொண்டிருக்கையில் மூத்த மகன் தாயிடம் போய் உட்கார்ந்தான். அதைக்கண்டு எல்லோரும் ஆச்சரியப்பட்டார்கள். அப்போது அவன் தாயை நோக்கி, "அம்மா உன் தமையன் கொடுத்தநிலத்தை விற்றுவிட்டேன். 3000 ரூபாய் வந்தது. அதை உன் பேரில் பாங்கியில் போட்டு விட்டேன். அதை யார் உனக்கு உபசாரம் செய்கிறார்களோ அவர்களுக்குக் கொடு" என்றான். இதைக் கேட்ட நாட்டுப் பெண்கள் தாம் பணத்தைத் தட்டிவிட வேண்டும்என்று நினைத்தனர்.

ஃ ஃ ஃ

மறுநாள் முதல் உபசாரம் கேட்க வேண்டுமா? ராஜ போகமாய் நடந்தது. சில தினம் கழிந்தது. அம்மா நோயால் படுத்து விட்டாள். நாட்டுப் பெண்கள் நம் பெயரில் எழுதியிருக்கிறாளோ? பெண் ஆகிய சேஷிக்குக் கொடுத்து விடுவாளோ என்று நினைத்தார்கள். கிழவியும் இறந்து விட்டாள். இவர்கள் யார் பெயரில் எழுதியிருப்பார்களோ என்றுநினைத்தார்கள்.

மறுநாள் மூத்த பிள்ளை தன் தம்பிசம்சாரங்களிடம்சென்று சிரித்தான். ஏன் சிரிக்கிறார் என்று நினைத்தனர். "அவன் என் தாயிடம் தம்பிடி கூட இல்லை. நீங்கள் நன்றாய் உபசரிக்க வேண்டும் என்பதற்காக நான் இச்சூழ்ச்சியைச் செய்தேன்" என்றான். இதைக் கேட்டு எல்லோரும் தலை குனிந்து விட்டனர்.

நான் "உங்களிடமிருந்து பணம்தான் பெரிது. அன்பு பெரிதல்ல என்றும், பணம் என்றால் பிணமும் வாய் திறக்கும் என்ற பாடத்தையும் தெரிந்துகொண்டேன்" என்றான். எல்லோரும் ஏமாந்து விட்டோமே என்று வருந்தினர்.

சகோதர சகோதரிகளே! தாய்மார்களே! அன்பே பெரிது. பணம் பெரிதல்ல. நீங்கள் அன்பைப் பெரிதாகக் கருதுங்கள்.

வை. மு. பத்மினி ஸ்ரீநிவாஸன் தொடர் கதை

# பாலர் மோகினி

## மாயக் கிளி

அல்லித்தண்டைப்போல் கை கால்கள் சில்லிட்டு இந்திரா, சந்திரா இருவரும் கொடியைப்போல் துவண்டு நினைவற்று விழுந்துகிடந்தார்கள். எவ்வளவு நேரம் அப்படி இருந்தார்களோ அவர்களுக்கே தெரியாது. ப்ரக்ஞை பெற்ற சிறுமிகள் மெள்ளப் பயந்தவாறு கண்ணைத் திறந்து பார்த்தார்கள்.

கருங்கல்லால் கட்டபட்ட ஒரு சிறிய அறை, எட்டினாலும் பார்க்க முடியாத உயரத்தில் வெளிச்சத்திற்காக ஒரு சிறிய த்வாரம். அது இளவரசிகளின் கைகூட பிடிக்காத அளவில் அவ்வளவு சிறியது. இருட்டில் கவனித்துப் பார்த்ததில் தட்டில் ஆகாரமும் ஒரு கிண்ணத்தில் ஜலமும் வைத்து இருந்தது. இதை எல்லாம் பார்த்து ஒன்றும் புரியாது திகைத்து, ஐயோ! நாம் எங்கு யாரிடம் சிக்கி இருக்கிறோமோ தெரியவில்லையே நம்மைப் பிரிந்து நம் பெற்றோர்கள் என்ன தவிக்கிறார்களோ என்ன என்ன ஆபத்துகள் வருமோ என்று பயந்து இருவரும் சேர்ந்து அணைந்துகொண்டு தம்மையும் மீறிக் கதறினார்கள். விம்மலை அவர்களால் அடக்க முடியாது திணறினார்கள்.

சற்று நேரத்திற்கெல்லாம் அறையின் கதவு திறக்கப்பட்டது. கோரைப் பல்லும், சடைத்தலையும், கருத்தமேனியுமாய் ஒரு உருவம் அவர்களை அணுகியது, அதைப் பார்த்துப் பயந்த இளவரசிகள் "கோ" வென்று கத்தியவாறு மூலையில் பதுங்கிக்கொண்டார்கள். ஆனால். அந்த உருவம் விட்டதா? தடதடவென்று அருகில் வந்து இருவர் கைகளையும் பற்றி பலாத்காரமாய், "ஊம்! கிளம்புங்கள்! யஜமானர் அழைக்கிறார்" என்று வெளியே இழுத்து வந்தது.

ஐயோ, என்ன பயங்கரம்! பலவிதமான ஆயுதங்களைக் கையில் ஏந்தியவாறு, நூற்றுக்கணக்கான ராக்ஷஸர்கள் நின்று கொண்டு இருந்தார்கள். ராக்ஷஸ அரசன் சிம்ஹாஸனத்தில் ஒய்யாரமாய் உட்கார்ந்து இருந்தான். பயத்தால் உடல் நடுங்க இளவரசிகள் கண்ணையும் திறந்து பார்க்கவும் பயந்து கண்களைக் கெட்டியாய் கைகளால் மூடிக்கொண்டார்கள். "ஹ...ஹ...ஹா...! என்ற பயங்கரமான ராக்ஷஸனின் சிரிப்பொலி இவர்கள் உடலை

ஒரு குலுக்கு குலுக்கியது. உயிரே பறந்து விடும்போல் வேதனை செய்தது. இதற்குள் ஒரு அரக்கனின் குரல் இவர்களை இன்றைய சமமலுக்கு இழுத்து செல்ல உத்தரவா என்று கேட்டது. இந்தக் கேள்வி இளவரசிகளைத் திடுக்கிடச் செய்தது. "ஐயோ, நம் கதி இவ்வளவுதானு? கடவுளே இதுதான் கிருபையா?" என்று ஏங்கினர். கரகரத்த அடித்தொண்டையில் ராக்ஷஸ தலைவன் "என்ன கேட்டாய், இந்த ரதிகளையா?.........ஊம்!.........நானும் எவ்வளவோ இளவரசிகளைக் கொண்டு வந்து இருக்கிறேன். ஆனால், இந்த அழகிகளைப்போல் பார்த்ததே இல்லை. இவர்கள் தான் என் பட்டத்து ராணிகள்!" என்று பெருமிதத்துடன் சொன்னன். உடனே இதை ஆமோதிப்பதைப்போல் எல்லாரும் பலமாய்க் கைகொட்டி ஆரவாரம் செய்தார்கள். கை கொட்டலின் ஒலி இளவரசிகளை நெருப்பில் போட்டுப் பொசுக்குவதைப்போல் வேதனை செய்தது. உடனே இளவரசிகள் அவர்கள் அறைக்கு அழைத்து செல்லப்பட்டார்கள்.

நாள், ஒன்று, இரண்டு என்று ஒரு வாரம் சென்றது. காலையும், மாலையும் இளவரசிகளின் அறைக்கு ராக்ஷஸன் தீவிரமாய் வரத்துடங்கினன். எப்போது என்னை மணக்கப் போகிறீர்கள்? உங்கள் சம்மதத்தைத் தெரிவியுங்கள்; இதுதான் கேள்வி. ஒரு பதிலும் சொல்ல முடியாது தவித்தார்கள், பாவம்! "அரக்கனை மணந்து அடிமை ஆவதைவிட அவர்கள் வயிற்றுக்கு இரையாய் இருத்தலே தேவலையே! தெய்வமே: இதற்கா எங்களை வரம் வேண்டிப் பெற்ருர்கள்? இப்படியா ஒரு சோதனை" என்று மனம் உருகி வேண்டினர்கள். தற்கொலையாவது செய்துகொண்டு இறப்பதே தவிர அரக்கனுக்கு மாலை இடுவது இல்லை என்று தீர்மானமாக முடிவு செய்தார்கள். ஆனல், அரக்கனிடம் அதைச் சொல்லாது: "இன்னும் யோசிக்கவில்லை" என்ற சாக்கையே சொல்லித் தட்டிக் கழித்து வந்தார்கள்.

பெண்களை இழந்த அரச தம்பதிகள் அன்ன ஆகாரம் இல்லாது ஒரேவாரத்தில் துரும்பாய் இளைத்தார்கள். சாருகேசன் தன் உயிர் போனலும் சரி, இளவரசிகளைக்கண்டு பிடிப்பதே தன் கடமை என்று முடிவுக்கு வந்தான். தைரியலக்ஷ்மியைத் துணைக்கொண்டு அரசனிடமும்' தன் தந்தையிடமும் உத்தரவு வாங்கிக் கொண்டு புறப்பட்டான்...ஆனல், எங்குப் போவது என்று புரியாது குழம்பினன்.

இளவரசிகள் காணமற்போனதற்கு முந்திய தினம் தானும், இளவரசிகளும் குதிரை சவாரி செய்துகொண்டு காடு மார்க்கத்தில்

சென்றார்கள் அல்லவா? ஏற்கெனவே அங்கு ராக்ஷஸர்கள் இருப்பதாகவே நூகேள்விப்பட்டு இருப்பதால் அங்கு யாராவது ராக்ஷஸன் இளவரசிகளைப் பார்த்து அழகில் மயங்கித் தூக்கிச்சென்று விட்டானோ? என்று பலமாய்ச் சந்தேகம் எழுந்தது. அந்த ப்ரம்மாண்டமான காட்டில் எங்கு ராக்ஷஸன் இருக்கிறான்?........ என்று பார்க்க ஆவல்தூண்டியது. ஆனால், உடனே பயம் வேறு பாதித்தது. கிளி ரூபத்தில் வந்து தன்னை ஒரு நொடியில் ஏமாற்றி இளவரசிகளைத் தூக்கிச் சென்ற ராக்ஷஸனைத் தன்னால் பிடிக்க முடியுமா?......என்ற அதைரியம்தான் தலை தூக்கியது. "சரி, எப்படியும் பார்ப்பது" என்று காட்டை நோக்கிப்புறப் பட்டான்.

செல்லச்செல்ல காட்டுமார்க்கம் போய்க்கொண்டே இருந்தது. ஒரு எல்லையோ, முடிவோ தெரியவில்லை. அடர்ந்த காட்டின் ஓசை சாருகேசனின் ஹ்ருதயத்தைச் சிதைக்கத் துடங்கியது. பசி வேறு வாட்டியது. எதையும் லக்ஷ்யம் செய்யாது மேலே நடந்து கொண்டே இருந்தான். அஸ்தமனம். ஒளி மங்கி இருள் கவ்வத் துடங்கியது.

"சரி; இனி, மேலேசென்றால் நம் லக்ஷ்யம் பூர்த்திசெய்யாது காட்டு மிருகங்களுக்குத்தான் இரை ஆக நேரிடும்...என்று, சரியாகப் பதுங்க இடம் தேடத்துடங்கினான். அதே சமயம் தூரத்திலிருந்து பயங்கரமான ஒரு சிரிப்பு ஒலி கேட்டது. "ஹா!...... கட்டாயம் ராக்ஷஸன் தான்!" என்று அருகில் இருந்த ஒரு புதரில் யோசிக்கக்கூட நேரம் இல்லாது சரசர என்று இறங்கினான். அதே சமயம் ஒரு சிங்கம் அதிக பசியோடு கர்ஜித்துக்கொண்டே ஓடிவரும் சப்தம் கேட்டது. மனித வாசனை அறிந்துதான் சிங்கம் தன்னைக் கடிக்க வருகிறதோ என்று சாருகேசன் நடுங்கிவிட்டான். பயத்தால் உடல் நடுங்கிக் குப்பென்று வெயர்த்தது. சற்று நேரத்திற்கெல்லாம் சிங்கம் யாருடனோ சண்டை போடுவதைப் போல் சப்தம் கேட்டது. அடுத்த நிமிஷம் சிங்கத்தின் குரல் பெரிய கர்ஜனையோடு அடங்கி விட்டது...அதைத் துடர்ந்து "ஹ!... ஹ'...ஹா!...என்னையா இரையாக நினைத்து பாய்ந்தாய்? ஊம்! நீ உன் காட்டில் மிருகங்களுக்கு ராஜாவாக இருக்கலாம். ஆனால், என் கத்திக்குப் பச்சை மிளகாய் சமானம்!" என்று சொல்லும் ஒரு பயங்கரக்குரல் கேட்டது. "அட! சிங்கத்தையே ஒரு போடில் கொல்லும் ராக்ஷஸன் பார்க்க எவ்வளவு பயங்கரமாக இருப்பான்! இவர்கள் கையில் தானோ என் கண்மணிகள் சிக்கித் தவிக்கிறார்கள்? கடவுளே! என்னைக் கைவிடாதே...காப்பாற்று'

ராக்ஷஸனுக்கு ஆகாரமாக்கி விடாதே" என்று வேண்டினன். அன்று இரவு பூராவும் நரகத்தில் இருப்பதைப்போல் முட்களின் பாதையைச் சகித்துக்கொண்டு தவித்தாறு கழித்தான். பொழுது விடிந்ததோ, இல்லையோ வந்த வழியே திரும்பி ஊரை அடைந்தான்.

மாயக்கிளியாய் வந்து தன்னை ஏமாற்றிய அரக்கனை மாய வலையில்தான் சிக்கவைக்கமுடியும்; வேறு மார்க்கமே இல்லை என்று தீர்மானித்தான். மந்திரமோ மாயமோ ஒன்றும் அறியாத சாருகேசன் என்ன செய்ய முடியும்? பைத்தியக்காரனைப்போல் ஜோஸ்யம் கேட்டுப்பார்க்கலாம். என் காரியம் ஜெயம் பெறுமா? தோல்வி அடையுமா?...என்று கேட்டுப் பார்க்கலாம் என்று யோசித்து ப்ரபல ஜோஸ்யர் வீட்டை அடைந்தான். இவன் கையைப் பார்த்த ஜோஸ்யர், "தம்பி! நீ எடுத்து இருக்கும் காரியம் நீ எதிர்பார்க்கும்படி கஷ்டமில்லாது சுலபமாய் வெற்றி அடையப் போகிறாய். நேராய் வடக்கு திக்கை நோக்கிச் செல்லு; அங்குதான் உன் வெற்றியின் வழிகாட்டி இருக்கிறது" என்று சொன்னர்,

அதிகக் கவலையோ, துக்கமோ ஏற்படும் சமயம், யாராவது நாலு நல்ல வார்த்தைகளைச் சொல்லி சமாதானம் செய்தால் அதுவே வெகு இன்பமாக இருக்கும் அல்லவா? அதுபோல் ஜோஸ்யரின் வாக்கு சாருகேசனின் செவிகளில் அம்ருதமாய் விழுந்தது. உடனே, வடக்கு திக்கை நோக்கி வேகமாய்ப் புறப்பட்டான். வடக்கின் எல்லையை அடையஅடைய ஒரு தேஜோமயமான ஜோதி தென்பட்டது. பார்ப்பதற்கு அருகில் இருப்பதைப்போல் தோன்றும் ஜோதி!...செல்லச்செல்ல அதுவும் தூரம் சென்று கொண்டே இருந்தது. ஆனால், சாருகேசன் தைரியத்தைக் கைவிடாது ஜோதியை அடைவதே தன் கடமை என்று சென்று கொண்டே இருந்தான். அது எங்கு இழுத்துச் செல்லுமோ?...யார் கண்டார்கள்?... (தொடரும்)

---

யோகி சுத்தானந்தபாரதியார் இயற்றிய

**காந்தி கீர்த்தனம்**

350 பக்கங்கள். ரூ. 3—8—0.

உயரிய கிளேஸ் புதிப்பு

# வாழ்க்கை தீபம்

**வை. மு. கோ.**

ஸௌபாக்கியவதி லக்ஷ்மிக்கு அனேக ஆசீர்வாதம்! உபயகுசலம்!

மன்மத வருஷமாகிய புதுவருஷம் நம்மெல்லோருக்கும் சகல மங்களங்களுடனும் ஸௌபாக்யங்களுடனும் இருக்கும்படி கீதாசாரியன் அருள் புரிய வேண்டுகிறேன.

மன்மத வருஷம் என்கிற பெயரைப் பார்க்கும்போது இந்த வருஷம் பிறக்கும் ஆண் குழந்தைகள் எல்லாம் மன்மதனைப்போல அழகாக இருக்குமா? அல்லது கல்யாணமாகாது இடக்கும் எத்தனையோ அம்மாமி!........மாமாக்களுக்கு!,மன்மதனின் பாணப்ரயோகத்தின் சக்தியால் கல்யாணமாகிவிடும் நற்காலம் பிறந்துவிடுமா?...என்ற எண்ணங்கள் உண்டாகிறதல்லவா? மன்மதனை எரித்ததுபோல வரதக்ஷிணை என்கிற பிசாசை எரிக்க எந்த முக்கண்ணனும் முன்வரவில்லையே என்றுதான் ஏங்க வேண்டியிருக்கிறது!

லக்ஷ்மி! மாமிக்கு எப்போது பார்த்தாலும் வரதக்ஷிணையைப் பற்றித்தான் எழுதவும் பேசவும் தெரியுமோ? வேறு ஒன்றுமே தெரியாதோ? என்று நீ நினைக்கலாம். ஆனால் ஒன்று சொல்கிறேன், கேளு. இரணியனின் ஆத்திரத்தைக் கிளப்பி நாஸ்திகத் தீயைத் தூண்டிவிட்டுக் கொண்டே பரகலாதன் ஆஸ்திக விதையை விதைத்ததனால்தான சீக்கிரம் விமோசனம் கிடைத்தது. அதுபோல் விரலநுழைய இடம் கிடைத்தால் தலையை நுழைப்பதுபோல் சமயம், சந்தர்ப்பம், இடம் கிடைத்தபோதெல்லாம் இந்த ப்ரச்னையை நான் விடப்போவதே இல்லை. என் கடைசி மூச்சுவரையில் சொல்லி விடுகிறேன்; எழுதி விடுகிறேன். பலன் கிடைக்கிறதோ? இல்லையோ? அது தெய்வ சங்கல்பத்தின் செயல்.

மன்மத வருஷமாகிய புத்தாண்டு பிறந்துவிட்டது! நமக்கு ஆகியுள்ள இத்தனை வயது காலத்தில் நாம் எத்தனை புத்தாண்டுகளைப பார்ததுவிட்டோம்! உலகத்தில் எத்தனை புதுமைகளைக் கண்டுவிட்டோம்! ஆனால், தனிப்பட்ட முறையில் ஒவ்வொருவரும் தன் மனத்தைத் தொட்டுப்பார்த்துக் கொள்ளும்போது நாம் இத்தனை வருஷ காலத்தில் எத்தனை நல்ல காரியங்களை—பரோபகாரமான காரியங்களை—செய்திருக்கிறோம் என்று ஒரு க்ஷணகாலமாவது நினைத்துப்பார்த்தோமேயானால் அப்போது நம்மனச்சாட்சியே நம்மை இடித்துக்காட்டும். நம்மையே திருத்திப்

புதியபாடத்தைப் போதிக்கும். புதிய வருஷக் கொண்டாட்டத்தன்று பெண்களைப் பெற்றவர்கள் பகவானிடம் என்ன விதமாக மனமுருகி ப்ரார்த்தனை செய்வார்கள் தெரியுமா?

"கடவுளே! பெண் குழந்தைகளை நிறையக் காட்டிக் கொடுத்தது மன்றியில் செல்வத்திற்கும் பஞ்சத்தையளித்து விட்டாய். பிள்ளைகளைப் பெற்ற புண்யாத்மாக்களுக்குச் செல்வம் இருப்பினும் சரி, இல்லாவிடினும் சரி, பகல் கொள்ளையடிக்கும் பேராசையை மட்டும் ரத்தத்துடன் கலந்து நரம்பு—மயிர்க் காலுக்கு மயிர்க் கால்—வரதக்ஷிணை சீர்வரிசை வாங்கு வாங்கு என்று தூண்டும்படியான உணர்ச்சி வேகத்தையும் கொடுத்துவிட்டாய். அதற்குத் தக்கப்படி பெண் பெற்றவர்களுக்குத் திடீர்திடீர் என்று ஒரு புதையலாவது கிடைக்கும்படி வழி செய்கிருயா? அதுவுமில்லை. பெண்களை—அதிலும் நிரம்ப வயதான பெண்களை — வைத்துக்கொண்டு தவிக்கிருேமே. உனக்கு அந்த பரிபவம் தெரியவில்லையா? பிள்ளையைப்பெற்ற கொள்ளைக்காரர்களின் மனத்தைக் கொஞ்சம் இளகும்படிச் செய்யக் கூடாதா?"

என்று கண்ணீர்வடிய ப்ரார்த்தித்துக் கதறுவார்கள்.

இதற்கு நேர் எதிரிடையாகப் பிள்ளையைப் பெற்ருேர்கள் ப்ரார்த்தனை செய்வார்களேயன்றி, தாம் பிடித்தபிடியில் தளருவார்களா? என்ருல் அதுதான் இல்லை. ஏதோ வரதக்ஷிணை என்பதை வாங்கும் பேராசையுடன் நிற்காமல் லிஸ்ட்வேறு கொடுக்கிருர்கள் பாரு; அதுதான் வெட்கக்கேட்டிலும், பெரிய வெட்கக்கேடு!

லக்ஷ்மீ! எனக்கென்ன தோன்றுகிறது தெரியுமா? இம்மாதிரி வரதக்ஷிணை, சீரு, அது; இது......என்று ஜனங்கள் அதிகமாகப் பிடுங்குவதனுல்தான் பெண்களின் கதி பரிதாபகரமாகி—சில இடங்களில்—படுமோசமாகவும் ஆய்விடுகிறது! எத்தனையோ விஷயங்களை ஆராய்ச்சி செய்து கண்டுபிடிக்க சர்க்கார் புதியபுதிய முறைகளைக் கையாள்வதுபோல் எத்தனை குடும்பங்களில் இம்மாதிரி விஷயத்தினுல் பெண்களின் வாழ்வே சிதைந்து—தேய்ந்து—உடைந்து—பாழாகிவிட்டிருக்கிறது என்கிற விஷயத்தைக் கண்டு பிடிக்க ஒரு டிபார்ட்டுமெண்டு புதிதாகத் திறந்துவைத்து, கண்டு பிடிக்க ஆள்களை நியமித்து, இந்த வகையில் சிலருக்கு உத்யோகமும் கொடுத்து உதவி செய்யலாம்.

இப்படி அவதிப்படும் பெண்களுக்கு மட்டுமாவது சர்க்காரில் அவர்களுடைய படிப்புக்குத் தக்கபடி ஏதாவதொரு வேலையைக் கொடுத்துச்; சாப்பாட்டுறகு வழி செய்யவேண்டும். படிப்பிலும் இதர எந்த வகையிலும் உபயோகமற்றிருக்கும் பெண்களைப் பரீக்ஷித்து அவரவர்களுக்குத் தக்கவிதம் கல்வியில்—சங்கீதத்தில்—யார்யாருக்கு எந்தெந்தத் தொழில் ப்ரதானமாய் வரும்போல இருக்கிறதோ அந்தந்த வகையில் அந்தப் பெண்களைக்

கவர்ன்மெண்டார் இலவசமாகச் சேர்த்துப் படிப்பித்தும் பிற் காலத்தில் தன் வயிற்றைத்தான் கிரப்பிக்கொள்ளும்வழியிலாவது உதவி செய்து காப்பாற்ற வேண்டும். அல்லது வரதக்ஷிணை ஒழிப்புச்சட்டம் என்பதைக் கட்டாயமாகக் கொண்டுவந்து விரைவில் அமுலுக்கும் வரும்படிச் செய்யவேண்டும். இரண்டும் இல்லாமல் கல்யாண வயதை மட்டும் உயர்த்தி விடும் உபயோக மற்ற சட்டத்தைக்கொண்டு வந்துவிட்டதனல் ப்ரயோஜனமே இல்லாது பலவிதத்திலும் குழப்பமும் அசட்டு தைரியமும் உண்டாகிவிட்டது. ப்ராசீன முறைப்படி கேவலம் சிறிய வயது கல்யாணம் எத்தனையோ விதத்தில் நன்மைகளைக் கொடுத்த பெருமை இந்தச் சட்டத்தினல் அழிந்துதான் போயிற்றேயன்றி நன்மை ஏற்படவில்லை. வரதக்ஷிணை ஒழிப்புச் சட்டம் வந்தாலா வது ஒரு சிறிய நன்மை உண்டாகலாம் என்பது வெகுஜன அபிப்ராயமாகும்.

லக்ஷ்மீ! எதெதற்கோ புரட்சி!... மருட்சி!... ..என்கிறார்களே! இந்த விஷயத்தில் ஒரு புரட்சிக் கூட்டம் கட்டாயம் கிளம்பியே தீரவேண்டும் என்று எனக்குப் பெரிய ஆவலாக இருக்கிறது. பணக்காரர்களும் வரதக்ஷிணை வாங்குகிறார்கள்; சாமான்யர்களும் வாங்குகிறார்கள்; ஏழைகளும் வாங்குகிறார்கள்! இந்த மூன்று ரகத்தினருக்கும் சம்மந்தம் செய்கிறவர்கள் அதேபோன்று மூன்று ரகமுள்ளவர்களாகத் தானே வரன்கள் அமையும். மத்ய ரகமும் கடைசி ரகமும் எப்படி இந்த வரதக்ஷிணை வெள்ளத்தில் நீந்தி ஜெயிக்க முடியும்? இதையல்லவா முதலில் கவனிக்க வேண்டும். படித்த பிள்ளைகளுக்குக் கடைச்சரக்கு சாமானுக்கு விலை வைப்பதுபோல் வைத்திருக்கிறார்கள். இந்த வ்யாபாரம் எவ்வளவு கேவலமானது என்கிற உணர்ச்சியே மறைந்துவிட்டது போலும்.

இந்த உணர்ச்சியைக் கிளப்பிவிடுவதற்காகவே ஒரு நூதன புரட்சிக் கூட்டம் கிளம்பவேண்டும். ஆணுக்குச் சரிநிகர்சமான மான படிப்பு பெண்களும் படித்துப் பட்டம்பெற்றுப் பெருமைப் படும் காலமாக இப்போது இருக்கிறது. ஏட்டிக்குப்போட்டி என்பதுபோல் S. S. L C. பாஸ் செய்துவிட்ட பெண்ணுக்கு கன்யா சுல்கம் 2000 ஆயிரம் ரூபாய், உயர்ந்த ஆடை ஆபரணங்கள் 3000 ஆயிரம் பிள்ளைவீட்டார் போட்டால்தான் பெண்ணைக் கொடுப்போம் என்று ஒரு புரட்சி கிளம்பவேண்டும். அப்படியே படிப்படியாக B.A. பாஸ் செய்த பெண்ணானல் இத்தனை M.A.B.L., B,A.B.L., B.T., I.A.S. முதலிய பாஸ் செய்துவிட்ட பெண்களுக்குக் கையும் வாயும் கூசாமல் ஆயிரக்கணக்கில் கன்யா தக்ஷிணை வாங்க முன்வர வேண்டும். வாங்கும் தக்ஷிணையைக் கொண்டு தான் பிறந்த குடும்பத்திற்கு மகத்தான உபகாரத்தைச் செய்து ஒரு பெண் சாதிக்க வேண்டும். இப்படி எதிர்வெள்ளம் ஒன்று கிளம்பினல்தான் பழய வெள்ளம் அடங்கும் என்று திட்ட மாய்த் தோன்றுகிறது...எந்த அம்சத்திலும் ஆணுக்கும் பெண் ணுக்கும் சமத்வமுண்டு, வித்யாஸமில்லை என்று மற்ற விஷயங்

களுக்குக் கூறுவதுபோல் இந்தவிஷயத்திலும் வரனுக்குச் சரியான தக்ஷிணை வாங்குவதுபோல் கன்யாதக்ஷிணை என்று வாங்குவதிலும் சமஉரிமையை ஏன் கைக்கொள்ளக்கூடாது?

வரப்போகும் சட்ட சபைத் தேர்தல்களில் நிற்கப்போகும் பெண்மணிகள் யாரேனும் ஓட்டு கேட்க வந்தால், "சட்ட சபையில் போன உடனே கட்டாயமாய் வரதக்ஷிணை ஒழிப்புச் சட்டத்தை நீங்கள் தைரியமாய்க் கொண்டு வருவதானால் பெட்டி பெட்டியாக ஓட்டுகளை நிறைத்துவிடுகிறோம். நீங்கள் அழகு பொம்மைகள் போல் அங்குச் சென்று இடத்தை அலங்கரிப்பதற்கும் ஒருசிலரைப்போல் இந்த ஸ்தானத்தை வகிக்கும் மூலம் லக்ஷக்கணக்கில் பணத்தைச் சம்பாதிப்பதற்கும் செல்வதானால் இப்போதே ஓட்டி விட்த்தான் போகிறோம்'' என்று தைரியமாய்ச் சொல்வதற்காவது முதலில் பெண்கள் தயாரானால் அதுவே ஒரு குட்டிப்புரட்சி போன்றதாகவே அமையும் அல்லவா? இது விஷயத்தில் நான் சிலசில இடங்களில் இந்தக் கொடுமைகளை நேரில் பார்ப்பதால் ஆத்திரமாகவே வருகிறது. அதனால்தான் திரும்பத் திரும்பச் சொல்கிறேன். பண வசதி இல்லாது அவஸ்தைப்படுகிறவர்கள் விதி இப்படி என்றால் ஏராளமாக வசதி உள்ளவர்களில் ஒருசிலர் 'உங்கள் பெண்ணுக்கோ பிள்ளைக்கோ கல்யாணம் எப்போது?'' என்று யாராவது கேட்டுவிட்டால் தங்களுடைய ராஜ பதவியே நீங்கிவிட்டது போன்றும், துர்வாஸ மஹரிஷியைப் போன்றும் கோபத்தை யடைந்து தங்கள் மதிப்பைத் தாமே குறைத்துக் கொண்டு கன்னா பின்னா என்று பேசுகிறார்களாம். உலக விசித்திரங்கள் எண்ணற்றவைகளல்லவா? அதில் இதுவும் ஒன்று போலும் என்று உதறித்தள்ளிவிட்டுத்தான் வேடிக்கைப்பார்க்கும் காலமாக இருக்கிறது.

ஒருபுறம் வரதக்ஷிணையும் சீரும் வாங்குவதற்குக் கொக்கரிப்பு! ஒருபுறம் கொடுக்க இயலாது தவிக்கும் தத்தளிப்பு! இரண்டுக்கும் இடையில் பணச்செருக்கும் கர்வமும் கொண்டுள்ள சிலரின் எக்காளம்! இத்தனை பயங்கரச் சுழலில் உலகம் மிதக்கிறது வேடிக்கையிலும் வேடிக்கையல்லவா?

லக்ஷ்மீ! நான் அடிக்கடி உனக்குச் சொல்வேன் பாரு...உலகம் ஒரு அநுபவப் பள்ளிக்கூடம். இதில் நாம் கற்றுக்கொள்ள வேண்டிய விஷயங்கள் எத்தனையோ இருக்கின்றன. ஒருவருடைய வாழ்நாள் பூராவும் படித்தால்கூட உலகாநுபவப் பள்ளியில் கற்றுக்கொள்ளும் பாடங்களைப்போல் அறிய முடியாது. பகவான் கருணையால் எனக்கு இந்த உலக அநுபவப்பள்ளியில் படிக்கும் பாக்யம் கிடைத்திருக்கிறது ஒன்றே போதும்; நீ சிறுசு; உனக்கு இதற்குள் அவைகள் ஏற்படக் காரணமில்லை. எனினும் யாரிடமும் நம்பி நெருங்கிப் பழகிவிடாதே. முகத்திற்குநேர் தோத்திரம் செய்வதும் தலைமறைவில் பலவிதம் பலபேரிடம் அனாவசியமாய்ப் பேசி சிநேகத்திற்குச் சிதைவை உண்டாக்குவதுமே சில பெரிய

மனிதர்களின் புனிதச் செய்கையாக இருக்கிறது! அத்தகைய வகர்ளிடம் நீ அகப்பட்டுக்கொள்ளாதே; நீறுபூத்த நெருப்புப் போல் காணப்படும் மனிதர்களைக்கண்டு ஏமாறுதே. அதைத் தான் உனக்கு முக்யமாக எச்சரிக்கிறேன். "காரியம் ஆகும்வரைல் காலைப்பிடி; அதன் பிறகு கழுத்தை முறி" என்கிற பழமொழி பொய்யே யில்லை.

நல்லதை எண்ணிப் பல தொல்லைகளில் நீந்தி ஒரு காரியத்தைச் செய்யப்புகுந்தால் அது ஒரு சிலரிடம் நேர்விரோதமாய் முடிந்து அவர்களே விரோதியாகிவிடுகிருர்கள். இது எனது. ப்ரத்யக்ஷ அநுபவமாகையால் யாரிடம் பழகினாலும் அளந்து பழகு, அளந்து பேசு; இதுதான் முதல் பாடம். சில பசுத்தோல் போர்த்த புலிகளின் வகையருக்கள் வேறு உலகத்தில் நடமாடுகிறது. இந்த விஷயத்தில்தான் நாம் வெகு வெகு ஜாக்ரதையாகவும் அதிகூர்மையான நோக்குடனும் இருக்கவேண்டும். லக்ஷ்மீ! ஆதிகாலத்தில் பெரியவர் தாமே நன்றாக அநுபவித்துக் குட்டுப் பட்டுத்தான் "உள்ளே பகையும் உதட்டில் நகையும்": "செய்வதொன்று, சொல்வதொன்று", "பாம்பு என்று தாண்டாதே, பழுதை என்று மிதிக்காதே", "பாலுக்குங்காவல் பூனைக்கும் தோழன்", பிள்ளையையும் கிள்ளிவிட்டுத் தொட்டிலையும் ஆட்டிவிடுவர்", "எள்ளையும் தின்றுவிட்டு எதிரேயும் உறுமுவர்." என்றெல்லாம் நூற்றுக்கணகான பழமொழிகளை இதயத்திலிருந்து பொங்கிஎழும் உணர்ச்சியுடன் அள்ளிவீசி இருக்கிருர்கள்; பழமொழிகளைமட்டும் நான் என்றென்றும் மந்திரவாக்காக நம்பி மதிப்புடன் போற்றுவது நீ அறிந்த விஷயம். ஆகையால் அத்தகைய மேல்பூச்சு உறவுக்காரர்களிடம் ஜாக்ரதையாகப் பழகு. கேட்டதற்குப் பதில்; கேளாததற்குப்புன்னகை! இம்மட்டுடன் விலகிக்கொள். நீ ஒருவரை நம்பிவிட்டு மோசம் போனபிறகு விழிப்பதைவிட முதலிலேயே ஜாக்ரதையாயிருந்துவிட்டால் நல்லதல்லவா! அதனுல் இதை எழுதுகிறேன்: புத்தாண்டில் பலவித நன்மைகளும் க்ஷேமமும் கொடுத்து ரக்ஷிக்கும்படி பகவானை வேண்டுகிறேன். மற்றவை பிறகு.

உன் அன்புள்ள மாமி

---


## குழந்தைகள் நாடகம்

**கருணை உள்ளம்**
அல்லது
**அன்பின் எதிரொலி**
(நாடகம்)

குழந்தையுள்ளத்தை ப்ரதிபலிக்கும் நாடகம். குழந்தைகள் நடிப்பதற்கென்றே அவர்கள் பேசும் தமிழில் எழுதப்பட்டது.

விரைவில் வெளிவரும்.

அணா 12

# வாழ்க்கையில் ஒரு குறிப்பு

சில மாதங்களுக்கு முன்பு ஜகன்மோகினியில் வெளியான வாழ்க்கையில் ஒருநாள் என்ற தலைப்பில் வந்துள்ள மிகமிக முக்ய மான விஷயத்தைப் படிக்கும்போது என் தலை சுற்றியது. என் வாழ்க்கையிலும் இத்தகைய விஷயங்கள் ஏராளமாக இருக்கிறதே; இதைக் கட்டாயம் எழுதி விடலாமா என்று துடிதுடித்தது மனம். அந்த வேகத்துடன் ஒரே ஒரு குறிப்பு எழுதுகிறேன். கட்டாயம் வெளியிட வேண்டுகிறேன்.

எனக்கு அப்போது வயது 9. நான் பள்ளிக்கூடத்தில் படித் துக்கொண்டிருந்தேன். எங்கப்பாவுக்கு அப்போது 100 ரூபாய் தான் சம்பளம். எங்கம்மாவுக்கு ஆடம்பரத்தில் ஆசை அதிகம். "அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" என்று நான் படித்த பாடத்தையே என் மனத்தில் ப்ரதானமாக வைத்துக்கொண்டு எங்கம்மாவைத் தினம் நான் வணங்கிவருவேன். எங்கம்மாவுக்கு உறவுக்காரர்கள் அநேகர் அடிக்கடி வருவார்கள். அதில் ஒரு மாமா ப்ரதிதினமும் வருவார். அவருடன் எங்கம்மா வெகு வெகு அன்பாகப் பழகி வருவாள். அப்போது எனக்கு உலகமே தெரி யாது. நான் மிகவும் சிறுமியாதலால் இதுவும் குடும்பத்தில் நடக் கும் ஒரு மரியாதை என்று சத்யமாக நம்பி இருந்தேன். அம்மா அடிக்கடி அந்த மாமாவுக்குக் கடிதம் எழுதி என்னிடமே கொடுப் பாள். நானே பதிலும் வாங்கிக் கொடுப்பேன். இது எங்கப்பா வுக்குத் தெரியக்கூடாத விபரீத விஷயம் என்பது எனக்குத் தெரியாது.

ஒருதினம் நான் கடிதம் கொண்டு போகும்போது வழியில் அப்பா பார்த்து, "எங்கே போகிறாய்?" என்று கேட்டார். நான் விஷயத்தைச் சொல்லியதோடு கடிதத்தையே காட்டி விட்டேன். எங்கப்பாவுக்கு அப்போதிருந்த மனக்கொதிப்பை என்னால் க்ஷிக்க அப்போது சக்தியில்லை. இப்போது நினைத்தாலும் மனது கொதிக் கிறது. படித்த கடிதத்தை மடித்துக் கொடுத்துவிட்டு, "கண்ணா! பதில் வாங்கிக்கொண்டு வந்து என்னிடம் கொடு' என்றார். உடனே நான் அப்படியே செய்துவிட்டேன்.

என்னே அநியாயம்! நான் பள்ளிக்கூடத்திலிருந்து திரும்பி வருவதற்குள் "உங்கம்மா தூக்குப் போட்டுக்கொண்டு தொங்க

லாடுகிறாள்!' என்று என் சொந்தக்காரர் வந்து சொல்லி என்னை அழைத்துச் சென்று காட்டிய கோரமான காட்சி என்னிதயத்தை இப்போதும் உலுக்குகிறது! போலீஸும் தடபுடலும் ஒருபுறம்!... எங்கம்மாவின் துர்மரணத்தின் கோரம் ஒரு பயங்கரம்!

இரண்டும் சேர்ந்து என் வாழ்வையே பாழாக்கிப் பயித்தியம் பிடித்தமாதிரிச் செய்துவிட்டது. எனது 23 வயது வரையில் நான் சித்தப்ரமை கொண்டவள் போலவேதான் இருந்தேன். எங்கம்மாவுக்குப் பிறகு எங்கப்பா மறுமணம் செய்துகொள்ளவில்லை.

இரண்டுசன்யாசிகள்போல் நானும் அப்பாவும் சோகப்பிண்டங்களாக இருந்தோம். எனக்கு 25 வயதான பிறகு புத்திக்கு சாதாரண தெளிவு உண்டாகியது. எனினும் என்னை மணக்க எவரும் பயந்தார்கள். எங்கப்பாவின் ஆப்த சிநேகிதர் மட்டும் மனம் இரங்கி என்மீது கருணை செய்து என்னைத் தனது மகனுக்கு இரண்டாந்தாரமாக விவாகம் செய்துவைத்தார்.

நான் இப்போது இரண்டு ஆண் குழந்தைகளுக்குத் தாயாக இருக்கிறேன். எங்கப்பா பென்ஷன் வாங்கி ஓய்வாக இருக்கிறார். என்றாலும் என் இதயத்தில் படிந்த எங்கம்மா விஷயமான கரும் புள்ளியின் பயங்கரம் மட்டும் இன்னும் மாறவில்லை.

எந்தத் தாய்மார்களும் தங்கள் குழந்தைகளுக்கு த்ரோகம் செய்யும் முறையில் நடக்கும்படியான பிசாசு குணத்தைப் பகவான் ஒருவருக்கும் கொடுக்காதிருக்கும்படி ப்ரார்த்தனை செய்கிறேன்.

"உண்மைவிளம்பி"

---


## பக்தன் ஸ்ரீ ராம ஜயந்தி மலர். அணா 12.

பொருளடக்கம்

ஸ்ரீராமன் மானிட மகனா? ... 3
ராஜாஜியின் ராம ஜயந்தி செய்தி ... 9
காந்திஜி மணிமொழிகள் ... 10
திருவருள் மூழ்கினம் ... 12
அழகன் ... 14
சித்திரையில் திருவாதிரை ... 25
சங்கர விஜயம் ... 33
ஸ்ரீராமநவமி சிந்தனைகள் ... 37
கீர்த்தனாம்ருதம் ஓவியமலர்மாலை ... 53
ஷை சித்திர விளக்கம் ... 69
ஸ்ரீசதுர்புஜராமன் ... 74
ஸ்ரீமத் பாகவத ராமாயணம் ... 80
மஹாவீர வைபவம் ... 87
புது வருஷமும், பஞ்சாங்கமும் ... 92
மதுராந்தகம் ஸ்ரீராமர் ... 99
ஸ்ரீராமஜெயத் திருப்புகழ் ... 105

# ஆசை

நான் காலேஜில் படிக்கும்போது என் நண்பனுக்குத் தலை தீபாவளி வந்தது. அவன் மாமனார் கடிதம் எழுதுவதும், மனைவி காதல் கடிதங்கள் எழுதுவதும், அடிக்கடி மைத்துனர்கள் வந்து கடைக்கு அழைத்துச்செல்வதும், விதவிதமான சாமான்களை அவனுக்கு வாங்கிக் கொடுப்பதும், அவன் நவநவமான சாமான்களை அவனே ப்ரத்யேகமாய் மனைவிக்கு வாங்கி வைப்பதும் பார்த்து எனக்கும் இப்படியொரு காலம் வருமா?...என்று மனம் ஏங்கிக் கொட்டாவிவிட ஆரம்பித்துவிட்டேன்.

என்னுடைய பெற்றோர்கள் என்னைப் பணயம் வைத்து 5 ஆயிரம் ரூபாய் வரதக்ஷிணை வாங்கவும் அதற்காக நான் I. A. S. பரிக்ஷையைக்கட்டாயம் முடிக்கவேண்டும் என்று திட்டம்போட்டு எனக்கும் சட்டம் விதித்துவிட்டார்கள். பெற்றோர்களின் வார்த்தையைத் தட்டாமல் நான் படிக்க வாரம்பித்தேன். என் மனத்தில் விழுந்த ஆசை விதை தானாக வளர்ந்து செடியாகிவிட்ட வேதனையை—பகல்—கனவை என்னால் பொறுக்கவே முடியாது போயிற்று.

இது என் பெற்றோருக்கு எப்படித் தெரியும்? அல்லது 365 நாளுக்கொருதரம் வரும் வருஷத்திற்குத்தான் என் வேதனை என்ன தெரியும்? காலேஜில் எத்தகைய ஸ்திர லக்னத்தில் சேர்ந்தேனோ அந்த வேளையின் பலன் 7-வருஷமாகி விட்டது! இன்னும் காலேஜை விடவில்லை என்றால் பாருங்களேன்! என் பெற்றோர்களின் 5 ஆயிரம் ரூபாய் பேராசையும் பொடி பொடியாகிவிட்டது. என் நண்பனைப் பார்த்து நான் கொட்டாவி விட்டதெல்லாம் பூத்துப்போய்விட்டது. எப்படியாவது கல்யாணம் என்ற ஒரு பளுவு நீங்கினால்போதும் என்று எங்கம்மாவுக்குத் தோனறிவிட்டதால், பெண்வேட்டையாடத்துடங்கினாள். 7 வருஷம் காலேஜைவிட்டு அகலாத எனக்கு, ஆயுள் பூராவும் என்னைவிட்டு நீங்காமலிருக்க எந்தப் பெற்றோர்தான் பெண்கொடுக்க உடனே துணிவார்கள்? கடைசியில் கண்டெடுத்த மாணிக்கம் என் அத்தையின் மகள் அம்புஜத்தை விடேன் தொடேன் என்று மாலை இட்டுத்தீர்த்துவிட்டேன்! தலைதீபாவளியும் வந்தது. ஆனால், என் நண்பனை அடிக்கொருதரம் கடைக்கு அழைத்துச் சென்றதுபோல் என்னை யாரும் அழைத்துச்செல்லவில்லை என்றாலும், நானே தீபாவளிக்கு வேண்டிய சகலசாமான்களையும் வாங்கக் கடைக்கு சென்றுவிட்டேன். அத்தைக்கு நான்தான் ஒத்தாசை; ஆகையால் சகலபொறுப்பும் என்மீதே விழுந்து விட்டதால் அதிகமாகக்காசைச்செலவுசெய்து கண்ட சாமான்களையும் வாங்க மனது வரவில்லை.பணமாக அத்தைக்கும் என் அருமை மனைவிக்கும் மிச்சப்படுத்தி நல்லபேர் வாங்கிவிட்டசந்தோஷத்தில் பழய அசட்டு ஆசை ஓடியே போய்விட்டது. இப்போது நான் காலேஜில் படிக்கவில்லை; குமாஸ்தா வேலைபார்க்கிறேன்,

## 9. அருகம்புல்லும் ஆபத்தில் உதவும்

ராஜாராமனுக்குக் கூறத்தரமற்ற ப்ரமிப்பும் சிறிது கர்வமும் கூட உண்டாகிய முறையில் இன்ஸ்பெக்டரைக் கட்டிக்கொண்டு நின்றபடியே பேனாக்காரனையும் ரிக்ஷாக்காரனையும் மாறிமாறிப் பார்த்தான்.

அதே சமயம் போலீஸ் இன்ஸ்பெக்டர் பேனாக்காரனைப் பார்த்து, "ஸார்! இப்போது என்ன சொல்லுகிறீர்? இந்தப் பையன்தான் பேனாவைத் திருடியதாகவும் பல தெருக்களில் இவனைத் துரத்திக்கொண்டு ஓடிவந்ததாகவும் சாதனை செய்தீரே! இப்போது என்ன சொல்கிறீர்கள்? அநியாயமாய் ஒரு நிரபராதியின் மீது குற்றமும் அபாண்ட வார்த்தையும் துணிந்து சொல்லியதற்காக இவனுடைய பெற்றோர்கள் உம்மீது மான நஷ்ட வழக்கைத் தொடுக்கப்போகிறார்கள், தயாராக இரும்....

என்று முடிப்பதற்குள் கண்களில் ரத்தம்போல் சிவந்து கோபக் கனல் வீசும் முருகப்பன் தன்னை மீறிய துணிபுடன் "என்னை இந்தக் கதிக்குக் கொண்டுவந்த கிராதகக் கூட்டத்தைச் சேர்ந்த இப்படுபாவி இந்த முறையிலாவது மான நஷ்ட வழக்கின் மூலம் அவமானப்பட்டு தண்டனை அடையட்டும், "ஸார் சதிகாரக் கூட்டத்தில் இந்த த்ரோகியும் சேர்ந்தவன்தான் ஸார்!" என்று ராக்ஷஸத் துணிபுடன் கூறிமுடிக்கும் முன்பு ஜம்புலிங்கமே திகைப்புற்று அந்த மனிதன் மீது பாய்ந்து பிடிக்கும் க்ஷணநேரத்திற்குள் இத்தனை பேர்களின் கண்களிலும் மண்ணைத் தூவிவிட்டு சடக்கென்று ஓடிவிட்டான். உடனே ஜம்புலிங்கம் விசிலை பலமாக ஊதியதுதான் தாமதம். நாலு பக்கமும் போலீஸ் வீரர்கள் சிட்டுக் குருவிபோல் பறந்து வந்து தேடவாரம்பித்தார்கள். ராஜாராமனும் காற்று வேகத்தில் பறந்து ஓடித் தேடிப்பார்த்தான். எங்கும் காணவில்லை.

எல்லா வீரர்களும் மூலைக்கொருவராகச் சென்று பார்த்தும் காணாது முகத்தைத் தொங்கவிட்டுக் கொண்டு

183191
600 008

வந்ததைக் கண்ட ஜம்புலிங்கத்திற்கு அபாரமான கோபம் வந்துவிட்டது...."போலீஸ் புலிகளாம்....புலிகள்! நம்பர்களை மாட்டிக் கொண்டு கம்பீரமாக நிற்கும் பொம்மைகள் என்ருல் மிகையாகாது! இந்த இடத்திலிருந்து இப்போது நம் கண்ணெதிரில் ஓடிய மனிதனைப் பிடிக்கக் கையாலாகாத சுண்டெலிகளாக நிற்கிறீர்களே! வெட்கமில்லை?" என்று கர்ஜிக்கின்ருர்.

"ஸார்! நாங்களும் வெகு கூர்மையாகத்தான் மூலை முடுக்குகளில் எல்லாம் ஓடிஓடித் தேடிப் பார்த்தோம்...." "சீச்சீ! வெட்கங்கெட்டுப் பேசுகிறீர்கள்! தேடிப் பார்த்தால் ஏன் கிடைக்கவில்லை? காற்ருய் மறைந்து விட்டானு? காற்ருடியாய்ப் பறந்து விட்டானு? இந்தக் கைதியையும் அந்தப் பேனத் திருட்டுப் பையனையும் ஜாக்ரதையாய் லாக்கப்பில் அடையுங்கள்; ஜாக்ரதை! அவர்களையும் கோட்டை விட்டுவிடவேண்டாம்" என்று கண்களில் நெருப்புப்பொறி பறக்கக் கூறிவிட்டு, கூண்டில் உலாவும் சிங்கம்போல் இப்படியும் அப்படியும் உலாவுகிருர். ஆழ்ந்த யோசனையுடன் பல்லைக் கடிக்கிருர்! உதட்டைப் பிதுக்குகிருர். 'கைக்கெட்டியது வாய்க்கெட்டவில்லையே' இவன் கொலைகாரக் கூட்டத்தில்சம்மந்தப்பட்டவன்என்றுநான்கனவில் கூட நினைக்காத சமயம் வலிய விஷயம் தெரிந்தும் ஏமாற்றமாகி விட்டதே! என்ன விதம் இவனைக் கண்டு பிடிப்பது? கையில் கிடைத்தவனைப் பிடிக்காது விட்டுவிட்டது அவமானம்! அவமானம்!" என்று கத்துகிருர்.

அதேசமயம் ராஜாராமன் திருகத்திருக விழித்தபடியே "ஸார்!....ஸார்!" என்று மெல்ல பயந்தவாறு ஜம்புலிங்கத்தைப் பார்த்து நடுங்கியபடியே கூப்பிட்டான்.

ஏற்கெனவே ப்ரமாதமான கோபம் பொங்கும் சமயம் இந்தப் பயல் கூப்பிட்டதால் மேலும் ஆத்திரம் அதிகரித்துவிட்டது. "சீ! முட்டாள் பயலே! 'சார் சார்' என்று ஏண்டா ப்ராணனை வாங்குகிருய்? சாராவது குழம்பாவது? போடா வெளியே!" என்று கர்ஜித்தபடியே சுட்டுவிடுபவர்போல் பார்த்தார்.

ராஜாராம் பழயபடி அருகில் சென்று இடுப்பைக் கட்டிக்கொள்ள நடுங்கினன்! எனினும் தைரியத்தை விடாமல், "ஸார்! கொஞ்சம் இப்படி வந்து கோபிக்காமல் நான் சொல்ரதைக் கேளுங்கள்....ஜம்புலிங்கம் ஆத்திரத்துடன், "சீ! முட்டாளே! 'எரிகிற அடுப்பில் எண்ணெயைக் கொட்டுவதுபோல்

பேசி என் ஆத்திரத்தைக் கிளறிவிடுகிருய். உனக்கென் னடா இங்கு வேலை? போடா வெளியே !"என்று இறைந்து உறுமினர்.

ராஜாராமன் உண்மையிலேயே பயந்துகொண்டு நடுங்கியவாறு...."ஸார் ! இதோ போய்விடுகிறேன். ஆனல்,

"ஆனல் ! என்னடா, ஆனல் ? ஆனலும், போனலும்! பெரிய மனிதன்போல் பேசவந்துவிட்டாய் ! என்று முடிப் பதற்குள்; "ஸார் ! இங்குதான் கண்முன்பு ஓடிய மனிதன் எப்படி ஸார் காணுமல் மேஜிக்போல் மறைந்திருக்க முடியும்?"....என்பதற்குள் ஜம்புலிங்கத்திற்குப் பொறு மையே அற்றுவிட்டது. "சீச்சீ! அதிக ப்ரஸங்கி! சோம் பேறிப் பையன் ! ஏதோ சொல்லப் போகிருன் என்று பார்த்தால் ப்ரகஸ்பதி இதையே உளர வந்துவிட்டான். போடா வெளியே!" என்று கூறியவாறு தன் உத்யோக அதிகாரத்துடன் முதுகில் அறைந்துவிட்டார். அடியும் போலீஸ்காரரின் அழுத்தமானநெஞ்சின்கடினம்போலவே விழுந்துவிட்டதால் சின்னப் பையன் "ஆ"வென்று முத வில் அலறிவிட்டான். அடியின் வேகத்தை அளந்துகாட்டு வதுபோல் கண்களிலிருந்து மடமடவென்று அருவி பாயத்தொடங்கியது. ஆனல், அப்போதும் ராஜாராம் அவ்விடத்தைவிட்டுப் போகவில்லை. ஜம்புலிங்கம் அடித்த தோடு மட்டுமின்றி, கழுத்தைப்பிடித்தும் தடதடவென்று இழுத்துத்தள்ளிவிட்டதால் எந்த இடத்தில் உருண்டோடி நின்ருனே அந்த இடத்திலேயே நின்றுவிட்டான். அவ ஞல் அழுகையை அடக்க முடியவில்லை. விசும்பிவிசும்பி அழுதவாறு "ஸார்! ஸார்!" என்று அப்போதும் கூப்பிடு வதை நிறுத்தாது கூப்பிட்டான்.

அடங்காத ஆத்திரமும் எரிச்சலும் கொண்டு "டேய்! முரட்டுப்பயலே! இன்னுமாடா தைரியமாய் நின்றுஎன்னைக் கூப்பிடுகிருய்?!' என்று கர்ஜித்தபோது, "ஸார்! இதோ போய்விடுகிறேன். தயவுசெய்து இப்படி வாருங்கள்....... எனக்கொரு சந்தேகம் தோன்றுகிறது ஸார்! அதைச் சொல்லிவிட்டுப் போய்விடுகிறேன்" என்று விக்கிவிக்கி அழுதபடியே சொல்வதைக்கேட்ட ஜம்புலிங்கத்திற்கு ஆத்திரத்தின் மத்தியிலும், புகைமண்டலத்தின் மத்தியில் ஜோதி எரிவதுபோல் ஒரு சிறிது அநுதாபமும் பையன் பிடிவாதமாக நிற்கும் உறுதியைக்கண்டு சந்தோஷமும் உண்டாகியதால் அருகில் வந்து, "டேய்! உன் பிடி வாதத்தை நான் மெச்சுகிறேன். சுண்டைக்காய்ப் பைய

ஞகிய உனக்கு என்னடா சந்தேகமும் கூரிய யோசனை யும் தோன்றுகிறது? சொல்லடா அதை !" என்று கேட்டார்.

அழுகையின் விசும்பல் விடாமலேயே கேவியவாறு, "ஸார் !....அ....தோ....ஒரு ஜட்கா வண்டி நிற்கிறதே. அதில் ஒரு வேளை புகுந்துகொண்டிருப்பானே என்று தோன்று கிறது, ஸார்! வண்டிக்காரன் வண்டியை இங்கு நிறுத்தி விட்டு மரத்தடியில் உட்கார்ந்து பீடிபிடிக்கிறன் ஸார்!''.... என்பதைக்கேட்டு ஜம்புலிங்கத்திற்குச் சிரிப்பும் வெறுப்பும் கலந்த உணர்ச்சி உண்டாகியது. "டேய்! அப்போது முதல் போடும் பீடிகையைப் பார்த்தால் பையன் தலையில் கூட கொஞ்சம் வேலைசெய்யும் மூளை இருக்கிறதே என்று எண்ணினேன்; மடயா! உன் மண்டையிலுள்ள களி மண்ணில் நான்கு அடுப்பு போடலாண்டா! ஜட்காவண்டி தான் கண்ணெதிரில் நிற்கிறது தெரிகிறதே. அதில் ஆளாடா புகுந்து மறைந்துவிட்டான். அவன் மனிதன ? ஈ, எறும்பு, எலி, சுண்டெலியாடா? முட்டாள் பயல், சீச்சீ ! ஓடடா அறிவுகெட்டவனே !' என்று கர்ஜித்தார்.

அப்போதும் ராஜாராம் சளைக்காமல் "ஸார் வண்டி யின் அடிபாகத்தில் குழந்தைகளை விடும் தூளிபோல் கோணிகட்டி புல் அடைத்திருக்கிறது பாருங்கள், ஸார்! அதில் ஒருவேளை இருப்பானே! கனமாகத் தொங்குகிறது, ஸார்! அப்போது உங்க ஆள் தேடுகையில் புல்லைமட்டும் பார்த்துவிட்டுப் போய்விட்டார்கள், ஸார்! புல்லுமட்டும் இத்தனை கனமாகத் தொங்குமா. ஸார்? அதுதான் நான் சந்தேகப்பட்டுக்கொண்டு உங்களிடம் சொல்ல ஓடிவந் தேன். அதோடு அந்தக்கோணியைக் கவனியுங்கள். மெல்ல அசைகிறது பாருங்கள். முதலில் அதைப் பாருங்கள்" என்று வெகு கூர்மையானதும் போற்றக்கூடியதுமான முறையில் பையன் சொல்வதைக்கேட்ட ஜம்புலிங்கம் மிக வும் கூர்மையாகக் கோணியைக் கவனித்தார். ராஜாராம் மேலும் தன் பேச்சைவிடாமல், "ஸார்! கோணியை மட்டும் நான் கவனித்துவிட்டுச் சொல்லவில்லை. வண்டிக் காரனைக் கவனியுங்கள். ஸார்! அடிக்கடி புகையைவிட்ட படியே கோணியையே கடைக்கண்ணல் பார்க்கிறன், பாருங்கள் ! அதனல் அவனும் இவனுக்கு உடந்தையாய்.... என்பதற்குள் ஒரு சேவகன்....ஸார்! அவன் இந்த பக்கமே வண்டியோட்டும் பழய ரஹீம்ஸாயபு,ஸார் ! அவன் இப்படி எல்லாம் செய்யமாட்டான்.....என்று முந்திரிக்கொட்டை யைப்போல் சொல்வதைக் கேட்டு, ஜம்புலிங்கத்திற்குக்

கோபமே வந்து, "ஷட்டப்! உன்னை யார் கேட்டது? பீடி பிடிப்பவன் ரஹீம்ஸாயபுவா? சரியாபாரு! அவனுடைய தம்பி அஹ்மத்கான் என்பதுகூடத் தெரியவில்லையா?... இத்தனை சிறிய பையன் எனக்குக்கூடத் தோன்றாத கற்பனைகளுடன் கூர்மையாய் — தைரியமாய் — சொல்வதை இனியும் அலக்ஷியப்படுத்தக்கூடாது. முதலில் அந்தக் கோணியை அவிழ்த்துப்பாருங்கள். சாயபு ஓடாதபடி இருவர் பிடித்துக்கொள்ளுங்கள்" என்று உத்திரவிட்டபடியே தானும் வண்டியருகில் ராஜாராமனுடன் சென்றார்.

அடுத்த க்ஷணமே வீரர்கள் கோணியை அவிழ்த்துக் கீழே உருட்டியபோது ஜம்புலிங்கமே திகைத்து ப்ரமித்துப் போகும்படி அந்த ஆளைப் புல்லுக்குள்ளிருந்து வெளியில் இழுத்து நிறுத்தினர்கள். போலீஸ்காரர்கள் முகத்தில் அவமானக்களையும் அசட்டுப் பார்வையும் தாண்டவமாடுகிறது.....இதே வண்டியில் கோணியிலுள்ள புல்லைமட்டும் பார்த்துவிட்டுப் போய்விட்டோமே. இந்தச் சின்ன வாண்டுப்பயல் எத்தனை தீர்க்கமாய் யோசனைசெய்து கண்டுபிடித்துவிட்டான்! என்கிற பொருமையும் தாங்கள் இப்படிச் செய்யாமல் விட்டுவிட்டோமே! நாமே கண்டு பிடித்திருந்தால் ரிவார்டு வந்திருக்குமே....என்கிற துடிப்பும் அவமானமும் உண்டாகியது.

வண்டிக்காரனை இருவர் பிடித்துக் கொள்ளும் வரையில் அவன் கவலையற்று தைரியமாகவே உட்கார்ந்திருந்தான். பிடித்துக்கொண்டதுதான் தாமதம், அவன் "குய்யோ! முறையோ!" என்று கூச்சலிட்டவாறு, "சாமீ! நம்பிள்கி ஒண்ணுமே தெரியாதுங்க! இதென்னங்க; என்னைப் புடிச்சிக்கிட்டீங்க! நம்பிள்கி ஆளுத்தானே இவுரு; இவரையும் ஏன் புடிச்சிக்கிட்டீங்க" என்று கத்தினன். இந்த வார்த்தையைக் கேட்ட பிடிபட்டவன் அஸல் திருடன் போல் விழிக்கிறன்.

ஜம்புலிங்கம் ஸாயபுவிடம் சாவதானமாகச் சென்று, "என்ன சாயபு? ஏன் ஒரேயடியாய்க் கத்துகிறீர்! இவரைக் காப்பாற்றுவதற்காக நீங்கள்....என்பதற்குள் சாயபு பதை பதைத்தவாறு, "எஜமான்! நம்பிள்கி சொல்ரான்கேளுங்க; இவரு போலீஸ்காரருன்னு சொன்னரு; ஒரு கொலையாளியே கண்டுபுடிக்கனும் அதுக்காவ இதிலே பூந்துக்கிறேன். மொதல்லே போலீஸ்காரா வருவாங்க; நீ பேசாம இருந்துடு; கொலையாளி எப்போ வருவான்னு நம்பிள்கி தெரியரான். அப்போ நம்பள் சாயபூவே கூப்பிட்ரான்.

இந்த கொலையாளியே கண்டுபுடிச்சா போலீஸ்லே நும்பிள்கி ரிவார்டு வாங்கித்தரான்; இன்னிக்கு வண்டி வாடகைக்கு பயப்படாதே நிம்பிள் கொடுக்கிறான்னு சொன்னார். அதெப்பத்தித்தான் நம்பள் எடங்கொடுத்தான் மகாராஜ்! இதென்ன மகராஜ் ரெண்டுபேரையும் புடிச்சிக்கிட்டீங்க? இவரு போலீஸ்காரரு தானேங்க" என்றான்.

விவரம் ஸ்பஷ்டமாகப் புரிந்து விட்டது. தான் தப்பித்துக் கொள்வதற்காக ஒளிந்துகொள்ள இடம் கேட்டிருந்தால் கிடைத்திருக்காது என்பதை நன்றாக அறிந்து, தானே போலீஸ்காரன் என்று கதை கட்டிக் கூறித் தப்பிக்கப்பார்த்திருக்கிறான். அதன் விளைவுதானே இந்தச் சின்னஞ் சிறுபையனால் அகப்பட்டுக்கொண்டான் என்பது தெளிவாக விளங்கி விட்டது. இதைக் கேட்ட ராஜாராமனின் முகத்தில் எங்குமில்லாத ஒரு புதிய சந்தோஷமும், தெம்பும் உணர்ச்சியும் பொங்கி ப்ரகாசித்ததை ஜம்புலிங்கம் ஒருவர் மட்டும் உள்ளபடி உணர்ந்து கொண்டார்.

ஆத்திரத்தின் மிகுதியால் ஆவேசத்துடன் அடித்த அதே கையால் ராஜாராமனை அத்தனைபேர் மத்தியில் தட்டிக்கொடுத்து, "பலே கெட்டிக்காரண்டா நீ! இத்தனை சிறியவயதில் இத்தனை யோசனையுங் கூர்மையான ஆராய்ச்சியும்உனக்கிருப்பதைப் பார்த்து நான் ப்ரமிக்கிறேன். பல வருஷங்களாகப் போலீஸிலேயே உழைத்துவரும் இந்த ப்ரகஸ்பதிகளுக்கு இந்த அத்புதமான யோசனை தோன்றவில்லையே! டேய்! ராஜா! ஐயோ பாவம்! உன்னை நான் அடித்துவிட்டேனே என்று வருத்தப்படுகிறேன். என் மீது உனக்குக் கோபந்தானே" என்று கூறியபடி தன் ஜேபியில் வைத்திருந்த பப்பெர்மெண்டை எடுத்துக் கொடுத்து, "இந்தாடா! சாப்பிடு! பெப்பெர்மெண்டு சாப்பிடுவதில் நான் இப்பொழுது உன்னைப்போல் சின்ன பையனாகிவிட்டேன். நீ சாமர்த்யமாய்ச் செய்த வேலைக்கு இனிப்பாக முதலில் தருகிறேன் இந்தா" என்று கனிவும் பரிவும் தோன்றப் பையனின் வாயில் தானே இனிப்பாகப் போட்டார்.

இதற்குமுன் அடிபட்டுத் திட்டுவாங்கி விக்கி விக்கி அழுது துடித்த அவமானமெல்லாம் ராஜாராமனுக்கு ஒரு க்ஷணத்தில் பறந்துபோய் பழயபடியே சந்தோஷமும் சுதந்திரமாய்ப் பழகியதுபோன்ற சலுகையும் மனத்தில்

உண்டாகியதால், உடனே ஜம்புலிங்கத்தைச் சேர்த்துக் கட்டிக்கொண்டு, "ஸார்! பெப்பர்மெண்டு பலே ஜோரா இருக்கு, ஸார். எனக்கு உங்கள் மேல் கோபமே இல்லே; எனக்கு இப்போது சொல்லத் தெரியாத சந்தோஷம் பொங்குகிறது ஸார்!" என்று கூறியவாறு குதித்தான்!

ஜம்புலிங்கம் இன்னும் பெப்பர்மிண்டை அவனிடம் கொடுத்துவிட்டு, "டேய் ராஜா! நீ பலே கூர்மையான புத்திசாலிடா! நீ நன்ருகப் படித்துத் தேறி எங்கள் போலீஸ் உத்யோகத்திற்கு வந்துவிடு. பிறகு ஜமாய்க்கலாம்!" என்று கூறி உத்ஸாகப்படுத்திய பிறகு, பேனுவின் சொந்தக்காரனுகிய கொலைக்கூட்டத்தானைப் பார்த்து, "அடாடாடா! பேனுவைத் திருடிவிட்ட திருடனைப் பிடித்துக் கொடுக்க வந்த உமது விதி உம்மையே கைதியாக்கி விட்டதே, பாவம்! என்ன யோசிக்கிறீர்? பேனுவைப் பற்றிக்கூட எனக்குச் சந்தேகமாகவே இருக்கிறது. நீர் நிம்மதியாகச் சிறையில் போய் யோசிக்கலாம். இங்கு அலட்டிக்கொள்ள வேண்டாம்........"ஏ! சாயபூ! இவன் போலீஸ்காரன் என்று உன்னிடம் பொய் சொல்லியது உண்மைதானு? அதை நான் எப்படி நம்ப முடியும்?" என்ருர்.

சாயபு 'லபோ, திபோ' என்று கத்தியவாறு, எஜமான்! நிம்பள்கி சந்தேகம் வேணும். போலீஸ்காரன்னு சொன்னதனுலேதான் நம்பள் இங்கேயே இருந்தான். கொலைகாரப் பாவின்னு தெரிஞ்சிருந்தா நம்பள் ஓட்டம் பிடிச்சிருப்பான். அல்லா மேலே ஆணையா நம்பள் சொல்ரான்.... எஜமான்! என்னெ உட்டுடுங்க" என்று கத்தும்போது இவனுடைய விஷயத்தை எப்படியோ அறிந்து அவன் வீட்டார்கள் ஓடிவந்து வேண்டிக்கொண்டார்கள். ஜம்புலிங்கம் அவர்களை வெகு காலமாயறிந்தவராதலால் கெடுபிடியுடன் எச்சரித்து அனுப்பிவிட்டார். ஏய், 103! கொலைகார முருகப்பனுடன் சேர்த்து இவனை வைக்காதே. இவனைத் தனியறையில் போட்டுப் பூட்டு" என்று உத்திரவிட்டுவிட்டு, ஆபீஸ் வேலையைக் கவனிக்க ஆரம்பித்தார். இந்த அதிகார வர்க்கத்தையும், இடத்தையும், கைதிகளையும் கண்ட ராஜாராமனுக்கு எல்லாம் விசித்திரமாகவே தோன்றியது.

# 10

## வண்டவாளம் வெளிப்பட்டது

தன் மகனைத் தேடிக்கொண்டு கலங்கித் தவிக்கும் வேதனையுடன் ஆனந்தா தனது அண்ணன் கோதண்ட ராமனின்வீட்டிற்கு வந்து நிற்கும் சமயம், முன்பொரு அத்யாயத்தில் தெரிவித்தபடி, அண்ணன் மனைவி ஆடிய ஆட்டமும் சொல்லிய சொற்களும் ஏற்கெனவே புண்ணுகி உள்ள மனத்தைப் பின்னும் வாள் கொண்டு அறுப்பது போன்ற வேதனையுண்டாகி மடமடவென்று கண்ணீர் வந்துவிட்டது.

அங்கு நடக்கும் சம்பாஷணையிலிருந்து பையன் அங்கில்லை என்பதை யறிந்ததனுல் உண்டாகிய அதிர்ச்சியை விடப் பதின்மடங்கான வேதனையடைந்து தவித்தவாறு.... "அண்ணி! எனது பாவ ஜென்மத்தின் பலன் பூராவும் ஒருருவாய் அமைந்து ஒரு மகனுகப் பிறந்துவிட்டதற்காக நான் வருந்துகிறேன். உன் மகனுவது நன்ருக—சத்பாத்திரமாக இருக்கட்டும். என் வாடை உனக்கு அடிக்கவே வேண்டாம்———அண்ணு! அறியாமையினுல்—அஞ்ஞானத்தினுல்—நான் பதைக்கப் பதைக்க இங்கு தேடிக்கொண்டு வந்ததற்குச் சரியான மரியாதையும் மதிப்புரையும் கிடைத்துவிட்டதுபோதும். உங்கள் கூடப்பிறந்த சுதந்திரத்தையும் பாசத்தையுங்கொண்டு இங்கு புத்தியில்லாமல் தேடி வந்துவிட்டேன். நான் போகிறேன் அண்ணு! நமஸ்காரம்" என்று கண்ணீரை மடமடவென்று உதிர்த்தவாறு விடுவிடென்று போனுள்.

பாவம்! உண்மையில் கோதண்டராமனின் மனதும் கரைந்துக் கலங்கிக் கண்ணீர் முட்டிவிட்ட துக்கத்துடன் எதிரில்வந்து....ஆநந்தா! ஆநந்தா! நில்லம்மா! போகாதே, பாக்குவெட்டியின் நிலையில் இருக்கும் மனிதனைப்பார்த்து நீ பச்சாதாபப்படவேண்டும். எனக்குமட்டும் உன்மீது அக்கரையில்லையா! பையனைப்பற்றிக் கவலை இல்லையா! அந்தவிஷயத்தில் உன்னைவிட நான் அதிகமாய்க் கவலைப் படுகிறேன். என் மகளைக்கொடுத்து மகிழும் தனிப்பெருமையை நான் எவ்வாறு எதிர்பார்க்கிறேன் தெரியுமா! ஆநந்தா! ராஜம் சொன்னது மிகவும் பிற்போக்கான குற்றந்தான். அவளுடைய சுபாவந்தான் உனக்குத்தெரியுமே! கோபிக்காதேம்மா! கண்ணீர் விடாதே. அவளுக்காக நான் மன்னிப்புக் கேட்கிறேன். பையனைப்பற்றி பயப்படாதே. அவனுடைய போக்கே ஒரு விசித்திரமாயிருக்கிறது. நேற்று பள்ளிக்கூடத்தில் பெரிய கலாட்டாவாகிவிட்டது. பிறகு தீரவிசாரித்துப்பார்த்தால் அத்

தனையும் நன்மையிலேயே முடிந்ததைக்கண்டு நானே ப்ரமித்தேன். இன்று காலைகூட....

என்பதற்குள் ஆநந்தா தன் ஆத்திரத்தை ஒரு சிறிது அடக்கிக்கொண்டு,"அண்ணு! நான் பண்ண பாவத்திற்கு யார் என்ன செய்யமுடியும்? என்பொருட்டு யாருக்கும் எத்தகைய துன்பமும் வேண்டாம். என் விதியை நான் நொந்துகொள்கிறேன். இன்று காலையில்கூட ஏதோ ப்ரமாத மான திருட்டுப்பழியை ஒருபாவி சுமத்தி வீணுக கலாட்டா செய்துவிட்டாள். அதுவே அவளுக்கு மிகமிக நன்மையாக முடிந்துவிட்ட ரகஸியத்தை அவனறியாமல் ஓடிவிட்டான். அவன் மகா மானியும் கண்ணியமும் உள்ளபையனுயிற்றே திருட்டுப் பட்டத்தின் அதிர்ச்சி தாங்காமல் எங்காவது ஓடி விட்டானே!குளம் கிணறுகளில் விழுந்துவிட்டானே என்று தான் என் மனம் துடிதுடிக்கின்றது. அந்த சங்கடம் தாங்காமல்தான் நான் ஓடிவந்தேன். அவரும் முக்யமான ஆபீஸ்வேலையைக்கூட விட்டுவிட்டு தேடியலைகிருர். பள்ளிக்கூடம் விட்டு பிள்ளைகள்வரும் வேளைகூட ஆய்விட்டது. அவன் பள்ளிக்கூடத்திற்கே வரவில்லையாம். இன்று காலைக்குப் பிறகு பள்ளிக்கூடப் பிள்ளைகள் யாருமே அவனைப் பார்க்கவில்லையாம். அவர் மிகவும் கவலைப்படுகிருர்....

என்பதற்குள்....ஆநந்தா! அவனைப்பற்றி நீ கொஞ்சங்கூட அதைரியப்படாதே. நான் என்னமோ பேசாமலிருக்கிறேன் என்று எண்ணுதே. அவனுடைய ஜாதகத்தை பெரிய பெரிய ஜோஸ்யர்களிடத்தில் காட்டினேன். இப்படி துஷ்டப்பையனுக இருக்கிருனே இவன் உருப்படுவானு என்ற பயம் எனக்கும் உள்ளூர இருந்ததால் காட்டினேன். அவர்கள் ஒரேயடியாய் வானளாவப் புகழ்ந்து பேசி இருக்கிருர்கள். ப்ராணபயமே வேண்டாம்! அவனுடைய துஷ்டத்தனத்தின் செயல்கள் பூராவும் ப்ரமாதமாய் ப்ரகாசிக்கப் போகிறது! என்று பந்தயம் வைக்கிருர்கள்....

**ஆனந்தா:**—அண்ணு! என்றைக்கோ ப்ரகாசித்தால் எனக்கென்ன ஆகப்போகிறது. இன்றைக்கிருக்கும் இருள் கவ்விய பயங்கரத்தின் முன்பு நான் தவிப்பதைப் பகவான் வேடிக்கைதான் பார்க்கிருன். தவம் கிடந்து பெற்ற மகன் இப்படி உதவாக்கரையாகவா இருக்க வேண்டும். இதுவும் என் பாபந்தானே. இந்த ஜோஸியத்திலும் எனக்கும் அவருக்கும் நம்பிக்கையே இல்லை. இன்றைய விஷயத்

திற்கு முடிவு என்ன செய்வது? எங்கெல்லாம் அவன் செல்வானே அங்கெல்லாம் தேடியாகி விட்டது இனிமேல் மனம் தாங்கவில்லையே; போலீஸில் எழுதி வைக்கலாமா?

கோதண்டராமன் சிரித்தபடியே,"ஆனந்தா! அவன் என்ன சின்னக் குழந்தையா? நடக்கத் தெரியாது பேசத் தெரியாது தவிக்கும் சின்னப் பாப்பாவா? போலீஸார் பார்த்துத் தூக்கி வைத்துக்கொண்டு வீடு தேடி வருவார்களா? வயது ஆகிய பையன் போலீஸாரிடம் அகப்பட மாட்டான். உன் மனத்திற்கு சாந்தி வேண்டுமானல் நான் இப்போதே போய் போலீஸில் எழுதி வைக்கிறேன். எதற்கும் நீ என்னேடு வா! அடுத்த தெருவில் ஒரு ப்ரபலமான ஜோஸ்யர் வந்திருக்கிருராம். அவரிடம் ஆருடம் கேட்டுக்கொண்டு வரலாம் வா—"

"அண்ணு! இந்த ஜோஸ்யமும் ஆருடமும் ஆயிரத்தில் ஒன்றுதான் பலிக்கிறது. சத்யத்திற்குக் கட்டுப்பட்டு சொல்கிற மகான்கள் வெகுவெகு சிலர்தான். நல்ல உத்தமமான இந்த தர்ம சாஸ்திரக் கலையை படாடோப பயங்கரத்திற்கும் வயிற்றுப்பிழைப்புக்கும் தொழிலாகக் கொண்டு விட்டதால் பலிதமே ஆவதில்லை. பணத்திற்குப் பேசும் சாஸ்திரம் குணத்திற்கு வருமா! இது அவருக்குப் பிடிக்காதே அண்ணு...."

கோதண் :—ஆனந்தா! நீ சொல்வது சரிதான். இருப்பினும் இந்த நெருக்கடியான சமயத்தில் மனச்சாந்திக்காக ஒரு ஆருடம் கேட்டுப்பார்க்கலாமே! பையனுக்கு எத்தகைய உயிர்ப்பயமும் இல்லை என்பதை யறிந்துகொண்டால் கூடப் போதும். வா ஆனந்தா! மருமகப்பிள்ளையிடம் நான் சொல்கிறேன்" என்று கூறியபடியே அவளை யழைத்துக் கொண்டுசென்றூர். ஆனந்தாவுக்கு இஷ்டமில்லை எனினும் தாயன்பின் சக்தி ஒருபுறம் தூண்டித் தள்ளுகிறது. ஆயிரத்திற்கு ஒரு ஜோஸியம் பலிக்கும் விசித்திரம் இந்த நிமிடம் நமக்குப் பலிக்கக்கூடாதா! எங்காவது என் கண்மணி சவுக்யமாயிருக்கிருன், இப்போதே வந்துவிடுவான் என்பதைக் கூறிவிட்டால் போதும் என்ற அலைபாயும் ஆசை யொருபுறம் உந்தித்தள்ள அண்ணனுடன் சென்ருள். இருவருடைய எண்ணங்களிலும் ராஜாராமனின் உருவமே கூத்தாடியது.

அடுத்த தெருவை அடைவதற்குள்ளேயே, "எதிரில் பையன் வந்துவிடக் கூடாதா? அம்மா என்று ஆவலாய்

அழைக்கமாட்டானு?"என்று ஆநந்தா ஏங்கியவாறு சென்ருள். பெற்ற வயிற்றின் துடிப்பு மற்றவர்களுக்கு வருமா!

ஜோஸ்யர் வீட்டுக்குள் போவதற்கு முன்பே ஆனந்தாவின் மனது எதனுலோ பயந்து நடுங்கிப் பின்னடைகிறது. பையன் குளத்தில் கிணற்றில் விழுந்து விட்டான் என்று சொல்லி விட்டால்....என்ற அதிபயங்கரமான எண்ணம் மின்வெட்டுப்போல் நெஞ்சைப் பிளந்து வாட்டுவதால் ஜோஸ்யர் வீட்டுப்படி ஏருமல் தியங்கியவாறு....அண்ணு! ஜோஸ்யமும் வேண்டாம் ஒன்றும் வேண்டாம் எனக்கு ஏதோ பயமாக இருக்கிறது. ஏதாவது அபசகுனமான வார்த்தைகளைச் சொல்லிவிட்டால்........

"சேச்சே! ஏம்மா இப்படி பயப்படுகிருய். தலைவிதியை மாற்றுவது என்பது மனிதனுல்-முடியாத காரியம் என்று சொல்கிருயே! அந்தக் கடவுளின் செயலில் நல்ல வார்த்தையே வரட்டுமே...பயப்படாமல் வா ஆனந்தா.என் மனத்திற்குப் பயமோ அதிர்ச்சியோ தோன்றவில்லை,வா"என்று பலாத்காரமாக அழைத்துச் சென்ருர்.

இவர்களுக்கு முன்பு வந்த கூட்டம் வீடு நிறைந்திருக்கிறதைப் பார்த்தால் இன்று இரவு இங்கேயே சோத்து மூட்டையுடன் தங்கினுல்கூட ஜோஸ்யரின் பேட்டி கிடைக்காது போலிருக்கிறதே என்று இருவருக்கும் தோன்றியது. சாம்பிராணிப் புகையின் வாஸனையும் ஏதோ ஒரு தெய்வீகமான தோற்றமும் அங்கு காணப்பட்டதை யறிந்த ஆனந்தாவுக்கு நல்ல செய்தி கிடைக்குமா! ஆண்டவனே....என்று உட்கார்ந்திருந்தாள்.

கூடத்துப்புறம் உள்ள அறையில் ஜோஸ்யர் ப்ரமாதமாகச் சொல்கிருர். உள்ளே போய் வெளியே வரும் ஜனங்கள் வெகுசந்தோஷமாய் கும்மாளமடித்துக்கொண்டு போவதைக் கண்ட ஆனந்தாவுக்குப் பின்னும் சிறிது நம்பிக்கை உண்டாகியது. தன் மகனைப்பற்றிய நல்ல வார்த்தை சொன்னுல் போதுமே, ஆண்டவனே!....என்று நின்றிருந்தாள்.

சிறிது நேரங் கழித்து இவர்கள் போக வேண்டிய நேரம் வந்ததும் பயந்து நடுங்கியவாறே கடவுளை எல்லாம் ப்ரார்த்தனை செய்தபடி உள்ளே சென்ருர்கள்.

ஜோஸியர் தடபுடலான ஆஸனத்திலமர்ந்து ஏதோ ஓலைச் சுவடியைப் பார்த்துக்கொண்டிருந்தார். இவர்கள் போய் நமஸ்காரம் செய்துவிட்டு நிற்கையில் ஜோஸ்யர் தொண்டையை கனைத்துக்கொண்டு இவர்களை ஏறஇறங்கப் பார்த்தார். இவர்களும் ஜோஸியரை உற்றுக் கவனித் தார்கள். அடுத்த க்ஷணமே இருவரும் மகத்தான ஆச்சரி யமும் அதிர்ச்சியும் அடைந்து, "ஹா! காசி அண்ணு?.... என்று இருவரும் ஏககாலத்தில் கூவினர்கள். அதே போல ஜோஸியரும், "அட, தங்கச்சி ஆனந்தம்மாளா! கோதண்டனு! அல்லது குமரவேலனு" என்று வியப்புடன் கேட்ட பிறகு, "உட்காருங்க. ஏது இப்படி வந்தது?" என்றுவிசாரித்தார்.

"இதென்ன வேடிக்கை அண்ணு! எப்போ இதெல்லாம் பழகிக்கொண்டீர்கள். யாரோ! ப்ரபல ஜோஸ்யர் வந்திருக் கிருரு என்றல்லவா அண்ணு கூட்டிக்கொண்டு வந்தார். யாரோ என்னவோ என்று நினைத்து பயந்தபடியே வந்தேன். இதென்ன அண்ணு விஷயம்!" என்று ஆனந்தா கேட்டாள்.

**கோதண் :**—ஏண்டா; காசி! இதென்ன சமாசாரம்? நிஜமாய் நீ ஜோஸியன்தானு! அல்லது....

**காசி :**—உஸ்ஸ்! உரக்கப் பேசாதேடா! நெஜமாவது, பொய்யாவது. என்னுடைய ஆதி நிலைமைதான் உனக்குத் தெரியுமே. இப்போது 14-வது ப்ரஸவமாகிப் பெண் பிறந் திருக்கிறது.

**கோதண் :**—ஐயையோ! உனக்கு 14 புத்ரோத்ஸவ மாடா? அக்ரமமே! சரிதான்! கலியுக குசேலராவதற்கு இன்னும் ஒரு டஜனும் ஒன்றுந்தான் பாக்கி!... சீச்சீ! வெட்கக்கேடு!...எல்லாம் பெண்ணு, பிள்ளையாடா?

**ஆனந் :**—அட க்ரகசாரமே! பிள்ளை வரங் கேக்க உன்னிடம் ஜோஸியத்திற்கு வருவதெல்லாம் உனக்கே திரும்பி விட்டதாக்கும்! அந்த மனுஷி எழுந்து நடமாடு கிருளா? பேசுவதற்காவது ஜீவனிருக்கிறதா? இதென்ன வேடிக்கை அண்ணு?

**காசி :**—சத்தம் போடாதே ஆனந்தா! வெளியே பெருங் கும்பல் காத்திருக்கிறதாம்! யாருக்காவது காது கேட்டு விடப் போகிறது. வயிற்றுப்பிழைப்புக்காக அரைகுறை

ஜோஸியம் கற்றுக்கொண்டு ஏதோ காலக்ஷேபம் நடத்து கிறேன்.

**கோதண்:**—ஏண்டா! தடிப் பயலாகத் திரிந்த காலத்தை இப்போது நினைத்துப்பார்த்துக் கண்ணீர் வடிக்கிறயா? உன் வண்டவாளம் வெளியாகி உதைக்க ஆரம்பித்து விட்டால் முதுகு சரியான நிலைமையிலிருக்கிறதா! நாம் பள்ளியில் படித்தகாலத்தில் ஒரு ஜோஸியர் பட்டபாடு நினைவு இருக்கிறதா?

**ஜோசி:**—அடேடே! நீ அதை எல்லாம் இப்போது கிளறிவிட்டுவிடாதேடா! வயிற்றில் ஏதோ சங்கடம் செய்கிறது. அவைகளை எல்லாம் நான் அடியோடு மறந்துபோய் என்வயிற்றுப் பிழைப்புக்காக ஏதோசொல்பவிஷயத்தைத் தெரிந்துவைத்துக்கொண்டு இப்படி காலக்ஷேபம் செய்கிறேன். கல்யாண ஜாதகம் பார்க்கத்தெரியும். சுமாரான ஆருடம் தெரியும். இந்த சரக்கைவைத்துக்கொண்டு ஒவ்வொரு பேட்டையில் கொஞ்சநாளைக்கு இப்படி முகாம் போடுவதும் நல்ல வார்த்தைகளையே சொல்லி த்ருப்தி செய்து வயிற்றிற்கு வேண்டிய ஆதாயம் கிடைத்த உடனேயே இடத்தைவிட்டுக் கிளம்பிவிடுகிறேன். ஏனெனில், அதிக நாள் தாமதித்தால் அந்த சாமியாருக்குக் கிடைத்ததுபோல் ஏதாவது கிடைத்துவிடுமோ என்கிற பயத்தினல் நானே பெரிய தடபுடலுடன் போய்விடுவது வழக்கம். இங்கிருந்து அடுத்த வாரம் புறப்பட ஏற்பாடாகிவிட்டது. நீங்கள்வருவீர்களென்று நான்கனவுகூடக் காணவில்லை.... என்று அவர் சொல்லிக்கொண்டிருக்கும்போது, அவருடைய கையாள் மெல்ல எட்டிப்பார்த்தான்.

அதைக்கண்ட ஜோஸியர்....ஆ....அப்படியா! இதற்கோர் பாட்டு உண்டு; அதைக்கேளுங்கள்: “ஆச்சப்பா! அசுவினியின் அருமைகேளாய்; பேச்சதனில் பெரியதொரு நன்மை உண்டாம்”...என்று அவர் ஓலைச்சுவடியைப் பார்த்துச் சொல்லுவதைக்கேட்டு ஆனந்தாவுக்கே சிரிப்பு வந்துவிட்டது. அதை அடக்கிக்கொண்டு கோதண்டராமனைப் பார்த்து, அண்ணு! நாம்போய்விடலாம். நம்மால் இவனுக்கு வீண் துன்பங்கள் வேண்டாம். பிறகு வேண்டுமானல் தனிமையில்வந்து பார்க்கலாம். இவன் பாவம் ஆச்சப்பா போச்சப்பா என்று மூச்சைப் பிடித்துக்கொண்டு வாய் வீச்சு வீசுகிருன்! நாம் போய்வரலாம் வா!....என்று ரகஸியமாய்க் கூறினுள்.

வந்த ஆள் தியங்கித்தியங்கி நின்றபடியே,"வெளியே கூட்டம் ஜாஸ்தியாயிருக்கு. கூச்சலிட்டுக் கலவை செய்ய ராங்க. இவங்க உள்ளேவந்து ரொம்பநேரம் ஆவுதுங்க.... என்று எச்சரித்தான். ஜோஸியர் கையினல் சைகை செய்து அவனைவெளியேஅனுப்பிவிட்டு அப்படியும்இப்படியும் பார்த்துச்-சமாளித்துக்கொண்டு....பாத்தியாப்பா! என் கதியை; சரி! நீங்க என்னதான் கேட்கவந்தீர்கள்? வரும் போது ஆனந்தாவின் முகம் கவலையால் வாடியிருந்ததே; விஷயம் என்ன?" என்ருர்.

கோதண்:—விஷயம் வெகு பெரியது ; அதை உன்னிடம் கூறிவிட்டு நீ அரைகுறையாய் ஏதாவது உளறி வைத்து இன்னும் கவலையைக் கிளறிவிடாதே! ஆனந்தாவின் அருமை மகன் ராஜாராமனைக் காலைமுதல் காணவில்லை. அவனை இன்று காலை யாரோ துச்சமாகப்பேசினர்களாம். அது அவனுக்கு ரோஷம் தாளாது எங்கேயோ ஓடிவிட்டான். அவன் இருப்பிடத்தை அறிவதற்காகவே பெரிய ஜோஸ்யர் என்ருர்களே! போய்க் கேட்கலாம் என்று வந்தோம். இங்கு ஒரே ஏமாற்றந்தான். சரி! சரி! நீ இந்த ஊரைவிட்டுப்போவதற்குள் வந்துவிட்டுபோ.

இதற்குள் ஜோஸ்யர், "இரு இரு! ஆனந்தா! ஐயோ! பாவம்! உன் குழந்தையையா காணவில்லை? இரு! இந்த ராமயணத்தில் ஒரு நூலைப்போட்டு ப்ரச்னைபார்க்கிறேன். அதில் விஷயம் விளங்கிவிடும்" என்ருர். ஆனந்தா பயந்து கொண்டே, "வேண்டாம் அண்ணு! வேண்டாம். அனுவச்யமான இடம் ஏதாவது வந்து இருக்கிற வேதனைபோதாமல் இன்னும் கொஞ்சம் கிளறிவிடவேண்டாம். தலை எழுத்துப் போல் நடக்கட்டும். நான் வருகிறேன்" என்று கூறிக் கிளம்பிவிட்டாள்.

பாவம்!ஜோஸியர் முகத்தில்அசடு வழிகிறது!"கோதண்டம்,ஆனந்தா! இந்த ரகஸியத்தை மட்டும் வெளியிட்டுவிடாதீர்கள். ஏதோ என் வயித்துப்பிழைப்பின் வாயில் மண் விழுந்துவிடும்" என்று கெஞ்சிக்கேட்டார். கோதண்டராமன் இவனுக்குமேல் பெரிய கைகாரனுகையால் பெரிய குரலில் "அடாடாடா! என்ன ஜோஸ்யம்! என்ன ஜோஸ்யம்! நூற்றுக்குநூறு உண்மையாக இருக்கும்! இத்தகைய ஜோஸ்யத்தை நான் பார்த்ததே இல்லை!" என்று ப்ரமாதமாகத் தோத்திரம் செய்தபடியே வெளியே சென்ருன். இதைக்கண்ட அங்குள்ள ஜனங்களுக்கு ஜோஸ்யரிடம் மதிப்பும் நம்பிக்கையும் அதிகரித்தன.

## 11

### பயமும் பூரிப்பும்

ஜோஸ்யர் வீட்டிலிருந்து வெளியே வந்த ஆனந்தாவுக்குப் பழயபடி மனக்கலக்கம் அதிகமாகி விட்டது. 'அண்ணு! நான் இப்படியே பஸ்ஸேறி வீட்டிற்குப் போகிறேன். நீ எதற்கும் போலீஸில் எழுதி வைத்து விடேன் அண்ணு! எனக்கு மனது என்னவோ சங்கடம் செய்கிறது' என்ருள்.

கோதண் :—நான் இந்த மாலை வேளையில் உன்னைத் தனியாகப் பஸ்ஸில் அனுப்ப மாட்டேன். வா உன் வீட்டிற்கே போவோம். ஒருவேளை அங்கு இதற்குள் வந்திருக்கிருனே பார்க்கலாம். உன் கணவரைக் கலந்துகொண்டு பிறகு போலீஸுக்குப் போகிறேன் என்று கூறி அழைத்துச் சென்ருர்.

ஆனந்தா வீடு வந்து சேர்வதற்குள் நன்ருக இருட்டி விட்டது. வீட்டில் நுழையும்போதே பையன் வந்து விட்டான் என்று யாராவது சொல்வார்களா? என்று எதிர் பார்த்தவாறு உள்ளே சென்ருள். வீட்டில் விளக்கே ஏற்ருமல் இருள் சூழ்ந்திருக்கிறது! வேலைக்காரி மட்டும் முகத்தைத் தொங்கவிட்டுக்கொண்டு உட்கார்ந்தவள் ஆனந்தாவைப் பார்த்ததும், "அம்மா! கொயந்தெ வந்திடுச்சாம்மா? நானும் வெச்சகண்ணு வாங்காமேதான் பாத்திருக்கிறேன். எந்தத் தகவலும் தெரியிலீங்க. கொஞ்ச நேரத்துக்கு முன்னடி யாரோ ஒருபோலீஸ்காரன் வந்து ஐயா இருக்காரான்னு கேட்டாரு...

என்பதைக் கேட்ட உடனே ஆனந்தாவின் சரீரமே நடுங்கியது. "ஐயையோ! போலீஸ்காரனு? என்னவாவது சொன்னுரா?" என்று அலறியவாறு கேட்டாள். "அம்மா! நான்கூட அப்படித்தான் நடுங்கித் தவித்துப் போயிட்டேனுங்க. கொயந்தெயெப்பத்திக்கூட அவரிடம் கேட்டேனுங்க. அவுரு ஐயாவெ பாக்கணும். முக்யமான விசயம்னு சொன்னுரு. அவுரு வெளியே போன ரவெ நேரத்துக்கெல்லாம் நாலு பசங்க ஓடிவந்து, ஆயா! ஆயா! சமுத்திரத்திலே யாரோ ஒரு பையன் விழுந்துட்டான்னு சொல்லிக்கராங்க. ராஜா வந்துட்டானு?" என்று கேட்டப்போது என் உசிரே போய்ட்டதுபோலாயிடுச்சு....என்று சொல்வதைக் கேட்ட ஆனந்தாவுக்கு இன்னதென்று விவரிக்க முடியாத வேதனையுண்டாகி அப்படியே விழுந்து விட்டாள்.

கோதண்டராமனுக்கும் அப்படியே நிலை தடுமாறிய வேகத்துடன் ஆனந்தாவைப் பிடித்துக்கொண்டு மெல்ல உள்ளே சென்று விளக்கை ஏற்றினர். இன்னது செய்வ

தென்றே தெரியாமல் திகைக்கையில் மறுபடியும் போலீஸ்காரன் அங்கு வந்து, "ஸார்!" என்று கூப்பிட்டான். உண்மையில் ஆனந்தாவின் உயிர் ஊசலாடும் சமயம் போலீஸ்காரனின் உருவத்தைக் கண்டு மீண்டும் கதி கலங்கிப்போய், ஐயா! நீங்களா சற்று முன்பும் வந்தீர்கள்? என்ன விஷயம்?" என்று மனம் தவித்தவாறு கேட்டாள்.

அவளுடைய பரிதாபத்தைக் கண்ட போலீஸ்காரனின் கல்நெஞ்சம் கூடக் கரைந்து விட்டது. உண்மையில் இந்த வீட்டு விஷயம் எதுவுமே தெரியாத அந்த சேவகன், "தாயே! நான் எத்தகைய கொடிய விஷயமும் கொண்டுவரவில்லை. ஐயாவிடம் ஆபீஸ் காரியமாகப் பேச வந்தேன். ஐயா இருக்கிறாரா? ஏன் என்னைப் பார்த்ததும் நீங்கள் இப்படிப் பயந்து போகிறீர்கள். உங்கள் பையனைக் காணவில்லை என்று வேலைக்காரி சற்று முன் சொன்னாளே! அதுதானே உங்கள் கவலைக்குக் காரணம்? பையன் கெட்டிக்காரப் பயலாயிற்றே! அவன் எங்கேயும் போய்விடமாட்டான். இரவு தானே வந்து விடுவான் என்று தானுகவே ஒரு தைரிய வார்த்தையைச் சொல்லி வைத்தான்.

ஆனந்தாவுக்கு இவைகளால் சமாதானம் உண்டாகிவிடுமா? சற்று நேரத்திற்கெல்லாம் தாமோதரனும் தொங்கும் முகமும் வாடிய பார்வையும் பெருமூச்சுமாக வந்து சேர்ந்தான். போலீஸ்காரன் நிற்பதைக் கண்டு அவரே திடுக்கிட்டு விட்டார் என்றால் மற்றவர்களைப்பற்றிக் கேட்க வேண்டுமா?

ஆர அமர விசாரித்த பிறகு ஆபீஸ் விஷயமாக வந்திருப்பதை யறிந்து அவனுக்குப் பதில் சொல்லி அனுப்பி விட்டார். கவலை தோய்ந்த முகத்தோடு குடும்பமே கலங்கிப் போய் உட்கார்ந்திருக்கையில், வாசலில் ஒரு கார்வந்து நின்றது. அதிலிருந்து கம்பீரமாக இன்ஸ்பெக்டர் ஜம்புலிங்கம் கையில் ராஜாராமனைப்பிடித்துக்கொண்டு இறங்கி வருவதைக்கண்ட எல்லோரும் மகனைக் கண்டுவிட்ட மகத்தான பூரிப்பு ஒருபுறமும் போலீஸ்காரர் பிடித்து வருவதால் ஷாக்கடித்தது போன்ற அதிர்ச்சி யொருபுறமும் பாதிக்கத் தவித்தவாறு "ராஜா!....என்று அன்புப்பெருமிதத்தினால் கூவிவிட்டார்கள். புத்திரவாத்ஸல்யத்தின் வசீகர சக்தியின் வேகத்தில் இன்ஸ்பெக்டர் அன்னியன் என்பதையும் மறந்து ஆனந்தா ஓடிவந்து ராஜாவை இழுத்துச்சேர்த்தணைத்துக்கொண்டாள். அதே சமயம் இரண்டு க்ரூரமான விழிகளின் பொறாமை நிறைந்த பார்வை அவர்கள்நிற்கும் அறையின் மேல்கூரையிலுள்ள கண்ணாடிகளின் வழியே கூரியவாள்போல் பாய்வதை சர்வேச்வரனையன்றி வேறு யாரால்தான் அறியக்கூடும்? கோரமான பார்வைக்கு முன்புதிரிய அன்பின் அலை மோதியது.

183191

### அரிய தமிழ் விருந்து (தொடர்ச்சி)

# ராணி சீலாவதி

வை. மு. ஸ்ரீநிவாஸன், M.A.B.L.
நான்காவது நவீனம் - ரூ-1/-

1. உபன்யாசமும் உதாசீனமும் 2 பேய்க்குக் கள் வார்த்த கதைதான் 3 வாக்கு பலித்தது—விபரீத யாத்திரையே 4 நிந்தனையும் நிபந்தனையும். 5. உவமையும் உவகையும் 6 வாழ்க்கைத் தோட்டத்தில் மலர்ந்த இதழ். 7. மடமையும் கடமையும்—சூழ்ச்சியின் வீழ்ச்சி 8 இனம் இனத்தைச் சேரும்—தூபமும் தாபமும் 9 விதையும் அறுவடையும் 10 தியாகச் சிகரம்—கடமையின் புண்ணிய வடிவம் 11. சீலாவதியும் சிலாவதியும் 12 ராஜரிஷியின் இதய கீதம்

# பெண்மணிக்கனல்

*சரித்திரஜோதி*

வை. மு. ஸ்ரீநிவாஸன், M.A.B.L.
ஐந்தாவது சித்திரம் ரூ 1/-

சரித்திரஜோதி—1 ஸ்தலமும் காலமும் 2 அஸ்திவாரம் 3 கபடநாடகமும் சூழ்ச்சிமேல்சூழ்ச்சியும் 4 இறுதி மொழியும் உறுதிப்பாடும் 5 சிங்கமும் புலியும் 6 வீழ்ச்சியும் மீட்சியும்

“கண்முனே காட்டினாள் பெண்மணிக்கனலை, பெண் சக்தியின் சிறப்பை, குன்றா உறுதியின் எல்லையை, மனமுண்டானால் மார்க்கமுண்டு என்ற உண்மையை! இந்திய சமஸ்தானங்களுள் பலவிதத்திலும் முன்னணியில் நிற்கும் மேன்மையை இன்று மைசூர் பெற்றிருப்பதற்கு உண்மையான அஸ்திவாரமிட்டவள் மாதரசி லக்ஷ்மி அம்மணியே!”

# இருளில் ஒளி

வை. மு. ஸ்ரீநிவாஸன், M.A.B.L.
ஆறாவது சுடர் ரூ. 1.40

முதல் பகம்—1 இருளில் ஒளி 2 திருமகளின் திருவருள் 3 கனியும் கன்னியும் 4- உள்ளும் புறமும் 5 உள்ளொளி 6. மனநிம்மதி 7 ஒளியும் ஒலியும்

இரண்டாம் பாகம்—1 ஒருபக்தனின சந்தேகநிவ்ருத்தி 2 கோலும் கொடியும் 3 லகுவான உபாயம் 4. முடிவும் நடுவும் 5 தெய்விக இசையின் அத்புத சக்தி 6. மலையில் மலை 7 கோபியரும் உத்தவரும்

## ஜகன்மோகினி வெளியீடுகள்

### தற்போது கைவசமுள்ள

### வை.மு.கோ.

### நாவல்கள்

1. வைதேகி ரூ. 4—8
7. கோபாலரத்னம் 1—4
11. வீரவஸந்தா 1—0
15. நளினசேகரன் 1—0
25. பக்ஷமாலிகா 0-12
35. அனாதைப் பெண் 1-12
42. உளுத்த இதயம் 0—8
43. மகிழ்ச்சி உதயம் 1—4
45. மாலதி 1—0
46. வத்ஸகுமார் 1—0
49. படகோட்டி 1—2
50. ஆத்ம சக்தி 2—0
51. உணர்ச்சி வெள்ளம் 2—8
52. சந்தோஷமலர் 2—0
53. கருணாலயம் 2—0
54. புகழ்மாலை 1 12
56. சுடர் விளக்கு 0 12
57. கலாநிலயம் 1 12
58. ஞான தீபம் 2—4
59. வாத்ஸல்யம் 2—0
60. க்ருபாமந்திர் 1—4
61. மதுரகீதம 2—0
62. பிரார்த்தனை 1—0
64. மலர்ந்த இதழ் 2—8
65. அமுத மொழி (சாதா) 2—0
,, (கிளேஸ்) 2—8
66. பிரதிக்ஞை 1—0
67. ஆசைப்ரவாகம் 2—0
69. அபராதி 1—2
70. வெளுத்த வானம் 2—0
71. ப்ரதிபலன் 1—8
72. பவித்திரப்பதுமை 1—8
73. பெண் தர்மம் 1—0
74. உண்மைச் சித்திரம் 1—0
75. தெய்வீக ஒளி 2—0
76. சிலாசாஸனம் 1 12
77. புதுமைக்கோயில் 1—4
78. மனத்தாமரை (மலிவு) 1—0
79. தபால்விநோதம் 1—0
80. ஓவியப்பரிசு 1—8
81. இனிய முரசு 1—0
82. ஆண்டவனின் அருள் 1—0
83. இசைப்புயல் 1—8
85. காலக்கண்ணாடி 1—8
86. ஜெயபேரிகை 1—8
87. ஜீவநாடி 2—0
88. வீராங்கனை 1-12
89. கானகலா 0—8
90. தூய உள்ளம் 0—8
91. ஸௌபாக்யவதி 0—8
92. ப்ரேமாச்ரமம் 0-12
93. நியாயமழை 0--12
94. அருணோதயம்* 0--12
95. மனச்சாட்சி 0--12
96. ப்ரபஞ்சலீலை 0—8
97. வெற்றிப் பரிசு 0—8
98. ரோஜாமலர் 0—8
99. இந்திரமோஹனா* 1—0
100. பாதாஞ்ஜலி 2—0
101. அமைதியின் அஸ்திவாரம் 1-12
102. நம்பிக்கைப் பாலம் 1—8
103. சாந்தியின் சிகரம் 4—0
104. கடமையின் எல்லை 1--12
105. குலதனம் 0-12
106. தைரிய லக்ஷ்மி 0—8
107. சுதந்தரப் பறவை 1—8
108. நிர்மல நீரோடை 3—0
109. குணக் குன்று 2—0
110. புனித பவனம் 2—0

* நாடகம்

### வை. மு. ஸ்ரீ. நூல்கள்.

1. உதய சூரியன 1—4
3. அவசரமூர்த்தியின் அபூர்வ டயரி 1—8
4. ராணி சீலாவதி 1—0
5. பெண்மணிக் கனல் 1—0
6. இருளில் ஒளி 1—4
6A. ஸ்ரீ ஸ்துதி 0—4
7. தியாகபலி 0-12

### வை. மு. பத்மினி ஸ்ரீநிவாஸன

பால மோகினி

12 சிறு கதைகள் 1—0

JAGANMOHINI, owned and edited by V. M. KOTHAI-NAYAKIAMMAL is printed & published by V. M. PARTHA-SARATHY at the Jagan Mohini Press, 26. Car St., Triplicane, Madras 5.